Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 26 புதன்கிழமை (12.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 320

## வவுணதீவில் திங்களிரவு தாக்குதல் விடுதலைப் புலிகள் மூவர் காயம்!

### கேணல் பானுவுக்கு பாதிப்பு ஏதுமில்லை

மட்டக்களப்பு, ஒக். 12

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுணதீவில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற பதுங்கித் தாக்குதலில் போராளிகள் மூவர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு உயிரிழந்தார் என்று வெளியான செய்திகளைப் புலிகள் அடியோடு மறுத்துள்ளனர்.

புலிகளின் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு கரடியனாறுக்குத் திரும்பிக்கொண்டிருந்த புலிகளின் வாகனத் தொடரணியே தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. இந்தப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டு எல்லைக்கு மிக நெருக்கமாக உள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவையும் ஒட்டுப் படைகளையும் சேர்ந்த 15 ஆயுததாரிகள் இரு தரப்புக் கட்டுப் பாட்டு எல்லைப் பகுதிக்கும் நடுவில் உள்ள சூனியப் பிரதேசத்தைக் கடந்து வந்து இந்தத் தாக்குதலை நடத்தியது என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் நேற்றிரவு அதிபர் சுட்டுக்கொலை

உரும்பிராய்,ஒக்.12

மானிப்பாய் - கோப்பாய் வீதியில் கோப்பாய் வைத்தியசாலைக்குச் சமீபமாக நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் நடராசா சிவகடாச்சம் (வயது-54) உயிரிழந்தார்.

தமது வீட்டில் அவர் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த சமயம் அங்குவந்த இரு நபர்கள் அவரை வெளியே அழைத்தனர் என்றும் -

அவர் வெளியே வந்ததும் சுட்டுவிட்டு இருவரும் தப்பி ஓடிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இடதுபக்க காதுப்பக்கமாக மூன்று வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் -

அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப் பட்டது. மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் முதலாம் தர அதிபராவார். கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளராக இவர் பணியாற்றிவருகின்றார்.

(3-8-11-72-86-154)

# யாழ்ப்பாணத்தில் சீரழிவுச் செயல்களுக்கு பொலீஸாரும் படையினரும் உடந்தை!

### கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி எடுத்துரைப்பு

பளை,ஒக்ரோபர்12

**யாழ்.மாவட்டத்தில் கொலைகள், களவுகள், கொள்ளைகள், கொலை அச்சுறுத்தல்கள், போதைப்பொருள்பாவனை, குழுமோதல்கள், பெண்கள் மீதான வன்முறைகள் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.**

**சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலீஸாரும் படைத்தரப்பினரும் இந்த அடாவடித்தனத்துக்கும் அத்துமீறல்களுக்கும் துணைபோகின்றனர்.**

**— இப்படிக் குற்றஞ்சாட்டியுள்ளார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.**

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரதித் தலைவர் ஜோன் மற்றும் கண்காணிப்பாளர் மெற்றி ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்த போதே இக்குற்றச்சாட்டை முன்வைத்தார் இளம்பரிதி.

பளையில் இயங்கும் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரசியல் பணி புரிந்துவந்த புலிகள் இயக்கப் போராளிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பின்னர் அங்கு உருவாகியிருக்கும் நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.

கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி செய்வோர், கசிப்பு விற்பனை செய்வோர் ஆகியோரிடம் பொலீஸார் கிரமமாக லஞ்சம் பெற்று வருகின்றனர். தமது தலைமைகளின் ஒத்துழைப்போடு பொலீஸார் இவ்வாறு செயற்பட்டு கசிப்பு

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஒக். 12

திருகோணமலை, நிலாவெளி, ஆத்தி மோட்டைச் சந்தி, 6ஆம் கட்டையிலிருந்து சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் ஈ.பி.டி.பி.

(18ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விஞ்ஞாபனம் ஞாயிறன்று

கொழும்பு, ஒக். 12

பிரதமர் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படும் எனத் தெரிவித்தார் அமைச்சர் மங்கள சமரவீர.

(18ஆம் பக்கம் பார்க்க)

## கைதான 3 பொலீஸாரினதும் விளக்கமறியல் காலம் நீடிப்பு

### தமிழீழ நீதிமன்றில் நேற்று உத்தரவு

கிளிநொச்சி, ஒக். 12

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த சமயம் கைதுசெய்யப்பட்ட பொலீஸார் மூவருக்குமான விளக்கமறியல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. தமிழீழக் காவல் துறையினரால் மூன்று பொலீஸாரும் மன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை யுனிசெவ் அமைப்பின் ஸ்ரீலங்காவிற்கான வதிவிடப் பிரதிநிதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள வெங்கர் பென்ஜே அனா அம்மையார் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இயக்கத்தில் இணையும் சிறாரை பெற்றோரிடம் ஒப்படைத்துவரும் புலிகளின் முயற்சி குறித்த தனது திருப்தியை வெங்கர் பென்ஜே அனாஅம்மையார் தெரிவித்தார்.

மேலும், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை யுனிசெவ் அமைப்பி

(18ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு மூலமே அரசியல் தீர்வு பிரதமர் அருகிருக்க ஜனாதிபதி தெரிவிப்பு

வாரியப்பொல, ஒக். 12

"நாட்டின் இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வு காணப்படும். இதுவே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை. அதனை மாற்ற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை."

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. நேற்று வாரியப்பொலவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமரும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்த மேடையிலேயே

(18ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைக் கலைப்பது குறித்து ரணிலுடன் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஒக்.12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதா என்பது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியூடாக மந்திராலோசனை நடத்தியிருக்கிறார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தொலைபேசி உரையாடலின்போது தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக இருவரும் முக்கியமான கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டனர் என இருவருக்கும் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தொலைபேசி உரையாடலின்போது குறிப்பாக நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரின் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் சுவரொட்டிகளுடன் அறுவர் கைது!

கொழும்பு, ஒக். 12

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளுடன் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு உரிய வாகனம் ஒன்றில் பயணம் செய்த ஆறுபேர் நேற்றுமுன்தினம் வெலிகம-குருபெவில சந்தியில் வைத்து வெலிகமப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

226 பிரசார சுவரொட்டிகள் வாகனத்தில் இருந்தன எனவும், கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினமே மாத்தறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க

(18ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுமாலை யாழ். சிற்றி ஹோட்டலில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதர் ஆர்.எஸ்.வன் டிக், இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சமாசத்தலைவர் நவாஸ்ரஜாப்டீன் மற்றும் யாழ். மாவட்ட கைத்தொழில் மன்றத் தலைவர் எஸ்.ருத்திரலிங்கம் ஆகியோர் கலந்துரையாடுவதையும் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பகீரதன்)

## ஆழிப்பேரலை நிவாரண உதவிகள் குறித்து

# இலங்கை கைத்தொழில் மன்றத்தினர் யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்தனர்

## நெதர்லாந்து தூதரும் பங்கேற்றார்

யாழ்ப்பாணம், ஒக்.12

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது குறித்து இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சமாச உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட கைத்தொழில் மன்ற உறுப்பினர்களுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

யாழ். சிற்றி ஹோட்டலில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் நெதர்லாந்துத் தூதுவர் ஆர்.எஸ்.வன்டிக்கும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சமாசத் தலைவர் நவாஸ் ரஜாப்டீன், பொதுச் செயலாளர் சமந்த அபய விக்கிரம, தொழில் ஊக்குவிப்பாளர் சாம் ஸ்ரம்போர் மற்றும் யாழ். மாவட்ட கைத்தொழில் மன்ற உறுப்பினர்கள் பங்குகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான மக்களின் உதவிகள் எவ்வாறு அவர்களைச் சென்றடைகின்றமை தொடர்பாகவும் -

இதுவரை உதவிகளைப் பெறாத மக்களுக்கு எந்த முறையில் உதவிகளை வழங்குவது என்பது தொடர்பாகவும் - விரிவாக ஆராயப் பட்டது.

இதேவேளை - நெதர்லாந்துத் தூதர் மற்றும் இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சமாச உறுப்பினர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிகளையும் நேற்றுமாலை பார்வையிட்டனர். (3-12-ரி)

## மயக்கநிலையில் மீட்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

வீதியோரத்தில் மயங்கிக்கிடந்த வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

சண்டிலிப்பாய், மடத்தடியைச் சேர்ந்த வல்லிபும் ராஜரட்ணம் (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை சண்டிலிப்பாயிலுள்ள தனது வீட்டிலிருந்து மானிப்பாயிலுள்ள அவரது சகோதரியின் வீட்டுக்குச் சென்ற இவர் மறுநாள் காலை மானிப்பாயில் வீதியோரத்தில் சுயநினைவிழந்த நிலையில் காணப்பட்டார்.

அங்கிருந்து இவர் உடனடியாக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று மாலை உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(3-13)

## விஞ்ஞானக் கண்காட்சி

புங்குடுதீவு, ஒக்.12

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய கணித விஞ்ஞானக் கண்காட்சியும் வாணிவிழாவும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தீவகக்கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (3-203)

# கைத்தொழில் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக் கல்லூரி

## அதன் தலைவர் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

இலங்கை கைத்தொழில் மன்றங்களின் சமாசம் யாழ். குடாநாட்டில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கு



நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. விரைவில் இக் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கைத்தொழில் மன்றங்களின் சமாசத் தலைவர் நவாஸ் ரஜாப்டீன்.

நேற்று யாழ். வருகைதந்த இவர், யாழ். நாவலர் வீதியில் கைலாயபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இலங்கை கைத்தொழில் மன்றங்களின் சமாசக் கிளையைத் திறந்துவைத்தார்.

இவரின் வருகை தொடர்பாகக் கேட்ட போது உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

யாழ். மாவட்டம் ஆழிப்பேரலையால் மட்டுமல்ல, போரினாலும் பாதிக்கப்பட்ட மாவட்டம். இங்கு ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை உருவாக்கி, க.பொ.த. பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலை அனுமதி பெறாத மாணவர்களுக்கு தொழில் கல்வியை வழங்கி அவர்களை மேன்மையடையச் செய்வதே எமது நோக்கமாகும் - என்றார்.

இத்தொழில்நுட்பக் கல்லூரிக்கு தேவையான விரிவுரையாளர்கள் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-12)

# கொக்குவில் பிரம்படி படுகொலை நினைவு நாள் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

கொக்குவில் பிரம்படிப் பகுதியில் கடந்த 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 18ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப் படவுள்ளது.

காலை 9.30 மணிக்கு கொக்குவில் பிரம்படிப் பகுதியில் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பொதுச்சுடரேற்றல், நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்தல், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தல், அகவணக்கம், நினைவுரைகள் என்பன இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , கல்விமான்கள், மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமை முற்றுகையிடுவதாகக்கூறி இந்திய இராணுவத்தினர் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை இப்பகுதியில் படுகொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(3-12)

## ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட

# 45 ஆயிரம் கோடி ரூபா நிதி உதவியும் ரணில் ஜனாதிபதியானதும் கிட்டுமாம்

## ஆகாயக்கோட்டை கட்டுகின்றது ஐ.தே. கட்சி

"ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளால் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாவும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானவுடன் தங்குதடையின்றி பெறப்படும். அதன்மூலம் நாட்டில் துரித அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்." "இன்றைய அரசாங்கத்திடம் நம்பகத்தன்மையும், உறுதியான வேலைத்திட்டங்களும் இல்லாததினாலேயே உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த தொகையை வழங்காமல் இடைநிறுத்தி வைத்துள்ளன."

- இப்படிக் கூறுகின்றார் முன்னாள் அமைச்சரும், நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான நவின் திஸநாயக்க.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே நவின் திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ரோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது போன்று ஆப்கானிஸ்தானுக்கும் உதவிகளுக்கு உறுதியளிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் உறுதியான வேலைத் திட்டங்களைச் சமர்ப்பித்து அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொண்டுவருகிறது. அதே வேளை, இலங்கை ஜனாதிபதியிடமும் இந்த அரசிடமும் உறுதியான வேலைத்திட்டம் ஏதும் இல்லை. நம்பகத் தன்மையும் இல்லை. அதனால் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கான உதவிகளை இடைநிறுத்தி வைத்துள்ளன.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியான வேலைத்திட்டங்கள் உள்ளன. சர்வதேச நாடுகள் மத்தியில் ரணில் குறித்து நம்பிக்கையும் உள்ளது. இதனால் உலக நாடுகளின் உதவிகளைத் தங்கு தடையின்றிப் பெற்று நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும்.

திறைசேரியை காலிசெய்து நாட்டை வங்குரோத்து நிலையில் வைத்திருக்கும் இந்த அரசுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணிலின் வேலைத்திட்டங்கள் வயிற்றைக் கலக்கிவிட்டுள்ளன. - என்றும் நவின் திஸநாயக்க கூறினார்.

(க-3)

# 'ஹெல்மட்' அணியாமல் பயணிப்போரை கைதுசெய்யும் நடவடிக்கை தீவிரம்

## நேற்று மூவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.12

'ஹெல்மட்' அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் நடவடிக்கைகளை யாழ். நகரப்போக்குவரத்துப் பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

'ஹெல்மட்' அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற மூவரை நேற்றுக் கைது செய்த போக்குவரத்துப் பொலீஸார் அவர்களை யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்களைத் தலா ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் 'ஹெல்மட் இல்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்தமாட்டேன்' என ஆயிரம் தடவைகள் எழுதிக்கொடுத்த பின்னர் மோட்டார் சைக்கிளை எடுத்துச்செல்லுமாறு பணித்தார்.

இதேவகையான தண்டனை நேற்றுமுன் தினம் ஒருவருக்கும் யாழ். நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்தது. (3-8)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கொள்கைக் குழப்பத்தில் தெற்கு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேசத்தின் முக்கிய இரண்டு பிரச்சினைகள் தொடர்பாக என்ன கொள்கையை வைத்திருக்கிறார் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெளிவாகவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை தீவின் மூலாதாரப் பிரச்சினைகள் இரண்டு. ஒன்று - நாட்டையே உலுப்பி வரும் இனப்பிரச்சினை. மற்றது - நாட்டை வறுமைக்குள் ஆழ்த்தியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை.

இந்த இரண்டில் இருந்தும் இலங்கைத் தீவு மீண்டு வருவதற்கான சரியான திட்டம் முன்னெடுக்கப்படாவிட்டால் அழிவிலிருந்து இந்தத் தேசத்தைக் காப்பது என்பது கனவாகிவிடும். இந்த யதார்த்தத்தை அனைத்துத் தரப்பினருமே ஒப்புக்கொண்டுள்ளனர்.

இத்தகைய - பற்றி எரியும் இரண்டு தேசியப் பிரச்சினைகளுக்கு - தமது தீர்வு என்னவென்பதை முன்வைக்க முடியாமல் அரசியல் தள்ளாட்டத்தில் குழம்பிப் போயிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் உயர் அதிகாரம்மிக்க ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுகின்ற இலக்குடைய பிரதமருக்கு, அந்தத் தேர்தலுக்கு இன்னும் ஐந்து வாரங்கள் இருக்கையில் கூட, தேசத்தின் முக்கிய இரு விவகாரங்களை அணுகுகின்ற முறைமை குறித்து ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அப்படியானவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்து இந்த நாட்டை எப்படி வழிநடத்தப் போகிறார்? - நாட்டு மக்கள் மனதில் இன்று எழுந்திருக்கும் சந்தேகம் இது தான்.

இந்தச் சந்தேகம் நாட்டு மக்களுக்கு மட்டும் உரியதன்று. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோடு, தேர்தல் பிரசாரத்தில் முன் நிற்கவேண்டிய அவரது தேர்தல் ஜோடியான - பிரதமர் பதவிக்கான வேட்பாளரான - வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவுக்கே இதே சந்தேக நிலைமைதான்.

இந்த இரு விடயங்களிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது நிலைப்பாடு என்னவென்பதைத் தீர்மானித்து அறிவிக்கவேண்டும் என்று, பிரதமரின் அரசில் இடம்பெற்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தனியான செய்தியாளர் மாநாட்டில் வைத்துப் பகிரங்கமாகக் கேட்கும் நிலைமைதான் உள்ளது.

பிரதமர் மஹிந்தவின் நிலைப்பாடு குறித்து அவரது எதிரணி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார்.

" தன்கொள்கைகள் குறித்துத் தீர்மானம் இல்லாத பிரதமர், இத்தேர்தலில் ஜனாதிபதியாகி நாட்டுக்கு என்ன செய்யப் போகின்றார்?" - என்பதுதான் அக்கேள்வி. ஒரு வகையில் பார்த்தால் நியாயமான கேள்விதான்.

ஜனாதிபதி சந்திரிகா கடந்த பொதுத் தேர்தலை ஒட்டி ஜே.வி.பியுடன் சேர்ந்து அமைத்த கூட்டணி, அரசு அமைத்து ஒரு வருடத்தின் பின்னர்தான் தனக்குள் மோதிக்கொண்டது. ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அமைத்துள்ள கூட்டணி, தேர்தலுக்கு முன்னரே தனக்குள் முட்டி மோதிக் கொள்கிறது. அதுவும் கொள்கை நிலைப்பாட்டில் பிய்ச்சல், பிடுங்கல் படுகின்றது என்று நையாண்டி செய்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்.

இந்த வகையில் பார்த்தால் ரணிலின் செயற்பாட்டில் ஒரு திட்டவட்டமான இலக்கு இருக்கின்றது. சிங்களத் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைப்பது என்பதுதான் அந்த இலக்கின் நோக்கு என்பதை அவரே தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆக, தேசியப் பிரச்சினையில் தமிழர்களுக்கு நியாயமான எதையேனும் கொடுத்துவிடக்கூடாது என்ற கொள்கையால் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஒரு புறம் வெட்டுக்குத்து நடக்கிறது. மறுபுறம் நியாயம் செய்வோம் என்ற பெயரில் பெரும்பான்மைச் சிங்களவரை ஒன்றிணைப்பதன் மூலம் தமிழருக்கு 'பிச்சை' போடும் திட்டத்தை முன்வைக்கிறது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

பெரும்பான்மைக் கட்சிகளான ஐ.தே.கவையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் கருத்திணக்கத்துக்குக் கொண்டுவருதல், தீர்வுக்கு அடிப்படையாக டோக்கியோ பிரகடனத்தைக் கொள்ளுதல், எட்டப்படும் தீர்வுத் திட்டத்தை சிங்கள மக்கள் முன்வைத்து சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் அனுமதிபெறல்,பின்னர் அதனை அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்குவதற்காக மற்றொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துதல் என்றெல்லாம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில் குறிப்பிடுவது தமிழருக்கு இவ்வாறு ' பிச்சை' போடும் சதித் திட்டத்தின் அங்கங்கள்தாம்.

ஆக, ஒருவர் கொள்கைக் குழப்பத்தில் தமிழர் தரப்பிற்கு நியாயம் செய்ய முடியாதவராக இருக்கின்றார் என்றால், மற்றவர் நியாயம் செய்வது போல காட்டி காலை வாருவதற்குத் தெளிவான கொள்கைத் திட்டத்தோடு காத்திருக்கின்றார்.

இவர்களில் யாரைத் தெரிவு செய்தாலும் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது துர்லபமே.

# உழவு இயந்திரம் செலுத்துவோரும் 'லைசென்ஸ்' பெறுவது அவசியம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பொலீஸார் அறிவுறுத்து

வலி.மேற்கு, ஒக்.12

யாழ்.குடாநாட்டில் இரண்டு சில்லு உழவு இயந்திரங்களுக்கும் (லான்ட் மாஸ்ரர்) சாரதி அனுமதிப்பத்திரம் வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் இரண்டு சில்லு உழவு இயந்திரங்களைச் செலுத்துபவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி தகவலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இந்தக்கூட்டம் நடந்தது.

இரண்டு சில்லு உழவு இயந்திரங்களுக்கு மோட்டார் வாகனங்களுக்குரிய சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது என்றும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

கிராம அலுவலர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி விரிவாக ஆராய்ந்தனர். பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அனுமதியின்றி சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கட்டடங்களின் கட்ட வேலைகளை உடனடியாக நிறுத்துவதற்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்தல்.

சுழிபுரம் பெரியபுலோ மக்களின் சுகாதார மேம்பாட்டுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துதல் வேண்டும்.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வளர்ப்பு நாய்களுக்கு அனுமதி அட்டைகளை வழங்குவதற்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்குக் கிராம அலுவலர்கள் முன்னின்று செயற்படவேண்டும். (த-175)

# சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு வலி.கிழக்கில் விரிவான திட்டங்கள்

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் பல திட்டங்கள் இவ்வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள திணைக்களத் தலைவர்கள், சுகாதார அதிகாரிகள், கூட்டுத்தாபனத் தலைவர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இதில் பிரதேச எல்லைக்குள் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது என்றும் மண்ணின் சமநிலையைப் பாதிக்கும் அனைத்துக் திண்ம, திரவக் கழிவுகளையும் அகற்றி சூழலைப் பாதுகாப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூழலைப் பாதுகாக்கும் செயற்றிட்டங்களில் சமூக மட்டத்தில் உள்ள அமைப்புகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதென்றும் கல்வி நிலையங்கள், ஆலய நிர்வாகங்கள், பாடசாலைகள், சூழலியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரையும் ஒன்றிணைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பிரதேச தூய்மைக்குச் சவாலாகவுள்ள கொல்களங்கள், தேநீர்ச்சாலைகள், கட்டாக்காலி நாய்கள், பாதீனியம், ஒலிபெருக்கிப் பாவனை, வீதியோர குப்பை கூழங்கள் போன்றவற்றால் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தடுக்கும் நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்படவுள்ளது.

உரும்பிராய், அச்சுவேலி, கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளில் உள்ள பொதுவீதிகள், சந்தைகள் உள்ள இடங்களில் சேரும் குப்பைகள், கழிவுப் பொருள்களைச் சேகரித்து இயற்கை உரம் தயாரிக்கவும் பொது இடங்களிலும் தனியார் வீடுகளிலும் சேரும் பொலித்தீன் பை, பிளாஸ்ரிக் கழிவுகளை பொது இடங்களில் சேர்த்து அங்கிருந்து அவற்றை அப்புறப்படுத்தவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

புத்தூர், நீர்வேலி, நிலாவரை கோப்பாய் பகுதிகளில் உள்ள பாதீனியங்களை அழிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கைகளுக்கு இப்பிரதேச எல்லைக்குட்பட்ட சகல வளங்களையும் பயன்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-203)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் மீண்டும் கதிரியக்க இயந்திரம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோயாளர் பிரிவில் உள்ள புற்றுநோய் கதிரியக்க இயந்திரம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளமையால் நோயாளர்கள் அங்கு சிகிச்சைகளைப் பெறமுடியும் என்று மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ். கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் கதிரியக்க இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அது கடந்த சில நாள்களாக இயங்காமல் இருந்தது.

இதனால் நோயாளர்களுக்கு ஒழுங்காகச் சிகிச்சைகளை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது இந்த இயந்திரக் கோளாறு சீர்செய்யப்பட்டு மீளவும் கதிரியக்க இயந்திரம் இயங்க ஆரம்பித்துள்ளது எனவும் -

சிகிச்சைகளை பெறவிரும்பும் நோயாளர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உள்ள புற்றுநோய் வைத்தியப் பிரிவுடனோ அல்லது யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய்ப் பிரிவுடனோ தொடர்புகொண்டு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - மாகாண பிரதி சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த-203)


### நாளை

புரட்டாதி 27
வியாழக்கிழமை
13.10.2005
திதி: ஏகாதசி
பின்னிரவு 02.19 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 11.37 வரை
சுபநேரம்: 07.32 - 09.02
ராகுகாலம்: 1.32 - 03.02
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வெற்றிபெறுவதற்கு என்ன வேண்டும் என்பதை விட என்ன வேண்டாம் என்பதில் தெளிவுவேண்டும்.
- ஓர் அறிஞர்.

**'கழிவுகளைக் கண்ட இடங்களில் வீசி எதிர்காலத்தைப் பாழாக்காதீர்**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சைவ சமயம் ஓங்கி வளர சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மற்றும் சகல பாடசாலைகள் மூலமாகவும் அயராது பாடுபட்டு சைவ சமயத்தை வளர்த்து அதில் பலர் புலவர்களாகவும், பண்டிதர்களாகவும், நல்ல பெரியார்களாகவும் உருவாக்கிய எமது

**சைவமணி வல்லிபுரம் கந்தசாமி**

அவர்களை யாழ்.பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

எங்கள் ஆலய தர்மகர்த்தா சபையில் காரியதரிசியாக 32 வருடங்கள் கடமையாற்றிய இவருக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.665,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

வி.எஸ்.இராமநாதன் *(தலைவர்)*
ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில்
*(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபை)*

(41270)(32-19-34)


# முதியோர் அடையாளஅட்டை; விண்ணப்பிக்கக் கோரிக்கை

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதியோர் அடையாள அட்டை பெறத் தகுதியானவர்களிடம் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வறியவர்கள், வசதியானவர்கள் என்ற பாகுபாடுகளின்றி அனைவருக்கும் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த அடையாள அட்டைகளை வைத்திருப் போர் அரச திணைக்களங் கள், அரச மருத்துவ மனைகள், போக்குவரத்துச் சேவைகள், வங்கி, பொலீஸ் சேவைகளில் சலுகைகளைப் பெற முடியும் என்றும் இதனைப் பெற விரும்புவோர் தத்தமது பகுதிக் கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ள லாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-178)

# ஜி.சீ.ஈ.பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஒக்.12

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி விட்டன என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளதால் பரீட்சைக்கான ஏற்பாடுகள் இம்முறை துரிதமாக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்திலிருந்து இம்முறை 25 ஆயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இம்முறை 165 பரீட்சை நிலையங்களும், 29 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கடந்த ஆண்டினை விட இரட்டிப்பான தொகையாக இம் முறை தோற்றவுள்ளனர் என்றார் அவர்.

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (த-13)


# மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்-2006

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

ஒரு புலமைப்பரிசில் → இரு Diploma

**தெரிவு செய்யும் முறை :**

இரு வேறுபட்ட முறைகளினூடாக மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

1. போட்டிப் பரீட்சை அடிப்படையில்
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் போட்டிப்பரீட்சையில் (பொதுஅறிவு, நுண்ணறிவு) தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.

2. A/L பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் உங்கள் A/L பரீட்சைப் பெறுபேற்றினைக் கொண்டு தெரிவுசெய்யப்படுவீர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை :**

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து ரூபா 200 விண்ணப்பக்கட்டணத்துடன் (பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

காசுக்கட்டளையாக அனுப்பவிரும்புவோர் :
**Director, Institute of Informatics Studies** எனும் பெயரிட்டு பணம் பெறும் நிலையம் **Post Office, Jaffna** எனக் குறிப்பிடவேண்டும்.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி
**Director, IIS, # 100, Clock Tower Road, Jaffna.**

## புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| PROGRAMME 1 (P1)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Computer Programming | PROGRAMME 2 (P2)<br>a. Dip. in Internet Technology<br>b. Dip. in Computer Programming |
| PROGRAMME 3 (P3)<br>a. Dip. in Internet Technology<br>b. Dip. in Java Programming | PROGRAMME 4 (P4)<br>a. Dip. in Internet Technology<br>b. Dip. in Hardware Technology |
| PROGRAMME 5 (P5)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Visual Basic . NET | PROGRAMME 6 (P6)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Desk Top Publishing |
| PROGRAMME 7 (P7)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Internet Technology | PROGRAMME 8 (P8)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in AutoCAD |
| PROGRAMME 9 (P9)<br>a. Dip. in Hardware Technology<br>b. Dip. in AutoCAD | PROGRAMME 10 (P10)<br>a. Dip. in Visual Basic . NET<br>b. Dip. in AutoCAD |

**A/L 2006**
பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காகவே
**May** மாதத்தில் விசேட பிரிவு

**விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்**

- IIS தலைமை அலுவலகம்
- IIS City Campus, நாவலர் வீதி, யாழ்.
- IIS Office Automation, பிரதான வீதி, யாழ்
- PC Paradise, யாழ்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.
- ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்.
- நாயகபாலன் புத்தகசாலை, மானிப்பாய்.
- துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
- பொதிகை புத்தகசாலை, கொம்பியூட்டர் கிரபிக்ஸ், சாவகச்சேரி.
- பொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.

**IIS இன் 10வது ஆண்டு நிறைவையொட்டி வழங்கப்படும் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பல்வேறு சிறப்புச் சலுகைகளை மாணவர்கள் அனுபவிக்க முடியும்**

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !

கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES** IIS

HEAD OFFICE :
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831 Fax : 021 222 6933

BRANCH :
Nelliady, Karaveddy
T.P : 021 226 3335


# உள்ளூராட்சிச் சபைகளுக்கு 250 பட்டதாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு 250 பட்டதாரிகள் நியமிக்கப் படவுள்ளனர்.

நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளின் விவரங்களை மாகாண பொது நிர்வாக அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கியுள்ளது.

விரைவில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 உள்ளூராட்சி சபைகளிலும் இந்த 250 பட்டதாரிகளும் முழுமையாக நியமனம் பெறவுள்ளனர்.

நிகழ்ச்சித் திட்ட நிதி உதவியாளர், நிகழ்ச்சித் திட்டப் பொது அபிவிருத்தியாளர், நிகழ்ச்சித்திட்ட சமூக நல அபிவிருத்தியாளர் என்ற 3 பதவிகளுக்கே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (த-185)


## கடை வாடகைக்கு

*பருத்தித்துறை நகர மெத்தைக் கடைச் சந்தியில் சுருக்கு இரும்புக் கதவு (கேற்) பொருத்திய 300 சதுர அடி விஸ்தீரணம் உடைய கடையும் மேலதிகமாக 2 களஞ்சிய அறைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.*
*தொடர்புகளுக்கு:*
**வ.குலவீரசிங்கம்,** *'பிறேமகிரி'*
*விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.*
(வி/45566)(32-16-15)


## துயர் பகிர்வு

*எமது பள்ளியின் ஆசிரியை*
*திருவாட்டி க.பிருதிவிராஜ்*
*அவர்களின் அன்புத் தந்தை*
**க.சபாரத்தினம்**
*அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.*

பள்ளிக்குழுமம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.

(41292)(32-16-15)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் செல்லையா

**(வீரகேசரி செல்லையா)**

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் செல்லையா அவர்கள் 09.10.2005 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் இராமலிங்கம் - அன்னமுத்து தம்பதியினரின் இளையமகனும் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும் வேணுகோபால் (கனடா), சாரதாம்பாள் (கனடா), ஞானாம்பாள் (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசையா, நல்லம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செ.வேணுகோபால்,*
*ஸ்காபுறா, கனடா.*
T.P.: 4167549651.

தகவல்:
**மருமக்கள்,**
**உரும்பிராய்.**

(41284)(32-34-19)

## அருளானந்தம் செபபாக்கியம்

**(ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்)**

பிடாரி கோயிலடி, ஆனைக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட அருளானந்தம் செபபாக்கியம் (ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்) அவர்கள் 10.10.2005 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற யோசவ் அருளானந்தத்தின் (ஓய்வுபெற்ற நூலகர்) அன்பு மனைவியும் எழினிகுமாரி (ஜேர்மனி), சேரலாதன், கோப்பெருந்தேவி (சுவிஸ்), கலைவேந்தன் (சுவிஸ்), நிர்மலகுமாரி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)ஆகியோரின் பாசமிகு தாயும் அன்ரர்சன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), சூரியா (சுவிஸ்), மகிந்தன் (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி) ஆகியோரின் மாமியும் கிளைவ், யுவான், நிஷான், டிலோஷன், நிலான், இவான் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**ஜே.மகிந்தன் (மருமகன்).**

(41285)(32-19-34)


## நாட்டின் பின்னடைவுக்கு அரசாங்க அலுவலர்களே காரணமென்று விவாதிக்கின்றார்கள்

கடந்த 57 வருடங்களாக தூரநோக்கற்ற திட்டங்கள் காரணமாக நிர்வாக சீர்கேடுகள் காரணமாக அரசு இயந்திரம் முடங்கிவிட்டது. இவற்றுக்கு எந்த அளவில் அரச அலுவலர்கள் காரணமாகின்றனர்?

பொய்யான வாக்குறுதிகளாலும் பின்னர் கவனிக்கப்படும் என்னும் கோட்பாட்டாலும் அவசரமாக முன்னெடுக்கப்படவேண்டிய பல வேலைத்திட்டங்கள் பின்போடப்படுகின்றன. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமைகளைக் கைநெகிழ்கின்றனர். ஏனைய அரசாங்க அலுவலர்களிடையே தமது அரசியல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர். அனைத்து கட்சிகளும் அரச அலுவலர்களைக் குறைகூறுகின்றன. அவர்களாலேயே நாடு சரியான நிலையில் இல்லை என்பது அவர்களின் வாதம். முப்படைகளும் பொலிஸாரும் கூட இந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தப்பவில்லை.

அரசாங்கத்தால் முன்வைக்கப்படும் திட்டங்களை அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப நடைமுறைப் படுத்துவதே அரச அலுவலர்களின் கடமை. ஆயினும் அதே அரசின் சில செயற்பாடுகளே அவர்களது கடமைக்குத் தடையாக உள்ளன. அரசின் அத்தனைத் திட்டங்களும் அரசியல் தந்திரத்துடனான திட்டங்கள். தேசிய திட்டங்கள் அல்ல. எனவே அரச அதிகாரிகள் தமது சுதந்திரத்தை இழக்கின்றனர்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மாகாணசபை ஆளுநர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் போன்றவர்களின் தலையீட்டால் அரச அலுவலர்களின் கைகள் கட்டப்படுகின்றன. எந்த ஒரு அரச அலுவலரும் அரசியல் தலையீட்டால் நாட்டுப்பற்றுடன் கடமையைச் செய்ய முடிவதில்லை. மேலிடத்து உத்தரவு என்கிற பெயரில் கட்சிப் பெரியவர்கள் தத்தமது வேலைகளை இந்த அலுவலர்களைக் கொண்டு செய்து முடிப்பதே உண்மை. அரசின் நிர்வாகம் இப்படி சீர்குலைந்துள்ளது.

ஒவ்வொரு அரசு ஊழியரும் நிர்க்கதியாகவும் உதவியற்றவர்களாகவும் இருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். நிர்வாகத்தை சுதந்திரமாகச் செய்வதற்கு அவர்களுக்கு வழிவகை செய்து கொடுங்கள்.

சித்தாலேப வைத்தியர் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை S.V.H.


## கண்ணீர் அஞ்சலி



எமது கிளையில் பணியாற்றும் ஊழியரான பாலகணேசன் அவர்களின் அன்புத் தாயாரான

**திருமதி**
**பாலசுந்தரம் செல்வராணி**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

டயலக் மற்றும் C.B.E.
நிறுவனங்களின் யாழ்.கிளை.

(C/43576)(50-16-15)

# யுத்தத்தை நிறுத்த பல தடவைகள் இராணுவம் முயன்றபோதும் புலிகளே அதை நிராகரித்தனர்

## பழியைத் திருப்பிப் போடுகிறார் இராணுவத் தளபதி

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்த யுத்தத்தை, அதன் தொடக்கத்திலேயே முடிவுக்குக் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை இராணுவத்தினர் பலதடவைகள் முயற்சி செய்தபோதும், தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை நிராகரித்து ஒருதலைப்பட்சமாகத் தொடர்ந்தும் யுத்தத்தையே முன்னெடுத்துச் சென்றனர். இதனால் நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தினரும் யுத்தம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

சமாதானத்தை ஏற்படுத்தும் இராணுவத்தினரின் முயற்சிக்குப் புலிகள் அப்போதே ஆதரவளித்திருந்தால், ஆயிரக்கணக்கான உயிர்களையும், வளங்களையும் அழிவில் இருந்து காப்பாற்றி இலங்கையை சுபீட்சமான ஒரு நாடாக மாற்றியிருக்கலாம். மக்களின் மனங்களில் ஏற்பட்ட இன வேறுபாடுகளையும்நீக்கியிருக்கலாம்.

- இவ்வாறு கூறினார் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட.

நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற இலங்கை இராணுவத்தினரின் 56ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவம் தனது 56ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தருணத்தில் எமது நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகங்களைச் செய்த இராணுவத்தினரை ஞாபகப்படுத்துவது சாலச்சிறந்தது. இந்த 56 வருடகாலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் யுத்தத்திலும் சரி, சமாதானத்திலும் சரி, மிகவும் திறம்படச் செயற்பட்டு நாட்டின் பாதுகாப்பை நிலைநிறுத்தியுள்ளனர்.

யுத்தத்தை வெற்றிகரமாகக் கையாண்டு இன்று தெற்காசியாவிலேயே தனி இடத்தைப் பிடித்துள்ளனர் இலங்கை இராணுவத்தினர். எமது தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் நேர்மை போன்றவையே இந்த வெற்றிக்குக் காரணம்.

கடந்த 20 வருடங்களாக யுத்தத்தை எதிர்நோக்கிய எமது நாடு இப்போது 3 வருடங்களாக சமாதானத்தை அடைந்துள்ளது. இந்தச் சமாதானத்தை உருவாக்க யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்தே இராணுவத்தினர் முயற்சித்தனர். புலிகள் அதனைப் புறக்கணித்துவிட்டு ஒருதலைப்பட்சமாக யுத்தத்தைத் தொடர்ந்தனர். இதனாலேயே இராணுவத்தினரும் அதை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இப்போதைய சமாதானச் சூழலிலும் கூட இராணுவத்தினர் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றனர். ஆங்காங்கே யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெறுகின்றபோதும் இராணுவத்தினர் தொடர்ந்தும் பொறுமை காக்கின்றனர். இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிகவும் சங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மீது அக்கறை கொண்டு இராணுவத்தினர் தொடர்ந்தும் சமாதானத்தைக் காப்பர்.

பல நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்கள், பேச்சுகள் மூலமே தீர்க்கப்பட்டுள்ளன. பிணக்குகளை முடிவுக்குக் கொண்டு வர யுத்தம் தீர்வாகாது என்பதை எம் நாடு இப்போது உணர்ந்துள்ளது.

இருந்தும் யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் இலங்கை இராணுவத்தினரின் பணி மிகப் பெரியது. இதனால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள இராணுவத்தினருக்கு நிகராக இலங்கை இராணுவத்தினரும் உள்ளனர் - என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - துணைப் படைகள் களையப்பட்டுவிட்டன. ஆண்டு நிறைவு நிகழ்வு முடிவடைந்ததும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இராணுவத் தளபதி வழங்கிய செவ்வி ஒன்றில் -

சிறிலங்காவின் அனைத்துத் துணைப்படைகளும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே களையப்பட்டுவிட்டன என்று குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

கருணா குழுவினருக்குப் பின்னால் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை இயங்கி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருவதை ஏற்கமுடியாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒஸ்லோ பேச்சுகளின் அடிப்படையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து அனைத்து துணைப்படைகளும் களையப்பட்டுவிட்டன.

நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகின்றோம். ஆனால், எந்த ஒரு எதிர்பாராத சூழ்நிலையையும் எதிர்கொள்ள இராணுவம் தயாராக உள்ளது. நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய அனுமதி கேட்டுள்ளோம். வளரும் நாடுகளின் எந்த இராணுவத்துக்கும் அடுத்த நிலை இராணுவமாக 2ஆவது இராணுவமாக சிறிலங்கா இராணுவம் இருக்கக்கூடாது என்பதே என் விருப்பம் - என்றார் அவர்.

# பண்டாரநாயக்காக்களின் நிபந்தனைகளால் இக்கட்டான நிலைக்குள் சிக்கியுள்ள பிரதமர்!

கொழும்பு, ஒக். 12

பண்டாரநாயக்க குடும்பத்தவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் பிரதமரும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ராஜபக்ஷவை இக்கட்டான நிலைக்குத் திக்குமுக்காட வைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்தவை ஆதரித்துப் பிரசாரம் செய்யவேண்டுமானால் தான் பேசும் மேடைகளில் ஜே.வி.பி.யினரோ ஜாதிக ஹெல உறுமயவினரோ இருக்கக்கூடாது; அந்த மேடை முற்று முழுதாக ஸ்ரீ.ல.சு.கவின் தேர்தல் பிரசார மேடையாக மட்டுமே இருக்க வேண்டும் எனக் கண்டிப்பான நிபந்தனை விதித்துள்ளாராம் ஜனாதிபதி.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க வேறு ஒரு நிபந்தனையை விதித்துள்ளாராம். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால், தன்னை (அனு ராவை) பிரதமராக்கும் அதேவேளை, தொடர்ந்தும் வெளிவிவகார அமைச்சராகவும் பணியாற்ற ஆவன செய்யப்படும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு எழுத்துமூலம் உத்தரவாதம் தரவேண்டும் என்று அனுரா வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு உறுதியளித்தால் பிரதமரின் தேர்தல் மேடைகளில் அவருக்கு ஆதரவாக உரையாற்றத் தான் தயார் எனவும் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க நிபந்தனை விதித்துள்ளாராம்.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் விதித்துள்ள இந்த நிபந்தனைகள் பிரதமருக்கும், அவரது சகாக்களுக்கும் பெரும் நெருக்கடியான நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு செல்வதற்கு முன், கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்குப் பிரதமர் மஹிந்தவின் தலைமையிலான குழு ஒன்றை நியமித்ததுடன், அந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் ஸ்ரீல.சு. கட்சியின் கொள்கைகளுக்கு முரண்படாத வகையில் இருக்க வேண்டும் எனவும் கண்டிப்பாகக் கூறிவிட்டே சென்றார். அதேசமயம், ஸ்ரீ ல.சு.கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவைக் கட்சியின் அதிஉயர் கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்தது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் இணைந்து உருவாக்கிய மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு சார்பிலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். இது ஜனாதிபதிக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்திவிட்டதாம்.

# நற்கருமங்களைத் தொடங்குவதற்கு உகந்த திருநாள் விஜயதசமி

இறைவனை அன்னையாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும். ஆதி பராசக்தியை வீரம் தரும் துர்க்கை என்றும் செல்வம் தரும் இலக்குமி என்றும் கல்விதரும் சரஸ்வதி என்றும் மூன்றும் சக்திகளாக மும் மூன்று இரவுகள் போற்றுவதே நவராத்திரி தினம் ஆகும்.

பத்தாம் நாள் விஜயதசமி. அன்றைய தினம் மானம் பூத் திருவிழா இடம்பெறும்.

ஒரு காலத்தில் திருமாலும் பிரமனும் ஒருவரில் ஒருவர் மேம்பட்டவர் யார் என்று போர் புரிந்தனர். தமது மாயா வல்லமையால் பிரமன் மகிடாசுரனைப் படைத்து திருமால் மீதும் திருமால் புலிமுகனைப் படைத்து பிரமா மீதும் ஏவிவிட்டார்.

இந்த இரு அசுரர்களுடனும் யுத்தம் செய்ய இயலாது திருமாலும் பிரமனும் அஞ்சி அம்பிகையிடம் சரண் புகுந்தனர். அம்பிகை துர்க்கை அம்மன் வடிவம் கொண்டு புலிமுகனைக் கொன்றாள். மகிடாசுரனின் அட்டகாசம் கண்டு கோபம் கொண்டு வதம் செய்தாள்.

இந்தப் புராணக் கதையை நினைவூட்டுவதாகவே ஆலயங்களில் அம்பாள் எழுந்தருளி வாழைவெட்டும் நிகழ்வு நடைபெறுகிறது. மனிதனிடமுள்ள மும்மலங்களை அகற்றி இறைவனை அடைய இதன் மூலம் வழிகாட்டப்படுகிறது.

### இன்று விஜயதசமி தினம்

வளர்பிறையின் பத்தாவது நாளாகிய தசமி தினம் எந்தவொரு கலையைக் கற்கவும் மிகவும் சிறந்த நாளாகக் கருதப்படுகிறது. அன்று பிள்ளைகளைக் கல்வி கற்க ஏடு தொடக்குவர். புதியகடை, புதிய தொழில் என்பவற்றை இந்தத் தினத்தில் ஆரம்பிப்பது நல்லது என்று கருதப்படு கின்றது.

நவராத்திரி நாள்களில் சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம், ஆடை அணிகலன்கள் முதலியவற்றைத் தானம் செய்தால் இலட்சக்கணக்கான பலன்கள் கிடைக்கும் என்பது பலரின் நம்பிக்கையாகும்.

தொழில் செய்வோர் தமது ஆயுதங்கள் அனைத்தையும், மாணவர்கள் தமது கற்கும் புத்தகங்களையும், பொன், பணம் என்பவற்றையும் வைத்துப் பூசைசெய்வர்.

அன்றைய தினம் முழுவதும் பூசையிலுள்ள புத்தகத்தையோ ஆயுதத்தையோ எடுத்துப் பண்படுத்தக் கூடாது. மறுநாள் புனர் பூசை செய்த பின்தான் அதனைப் பயன்படுத்த வேண்டும்.

அம்பிகையின் அருள் பெற்று மானிடப் பிறவியின் பயன் அடைய இந்த விழா பேருதவி புரிகிறது.

-வேலழகி-



சர்வதேச சூழல்தினமான கடந்த 7ஆம் திகதி தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையமும் கரைச்சிப் பிரதேச சபையும் இணைந்து நடத்திய வீதியோர கழிவகற்றும் பணியில் திணைக்களங்கள் சார்ந்தோர் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (த-405)



நாச்சிக்குடாச் சந்தியில் பஸ்தரிப்பிடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

அன்பர் பொ.சின்னத்துரையால் அவரது பெற்றோரின் ஞாபகார்த்தமாக அமைத்துக்கொடுக்கப்பட்ட இந்த பஸ்தரிப்பிடத்தைப் படத்தில் காணலாம். (த-415)



விசுவமடுப் பொதுச்சந்தையில் கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு சந்தையில் கழிவுகள் கொட்டப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (த-352)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையினர் தேவிபுரம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் 235 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பாடசாலைப் பைகளையும் சீருடைத் துணிகளையும் அன்பளிப்பாக வழங்கினர். இந்தப் பொருள்கள் வழங்கப்பட்ட நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம் இது. (த-353)



நவாலி சென்.பீற்றர் ஆலயத் தாக்குதலின் 10 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இறந்தவர்களது திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு இருப்பதனையும் - அந்த நிகழ்வுக்கு யாழ்.கத்தோலிக்க திருச்சபை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பூசை வழிபாட்டுக்குத் தயாராவதையும் படத்தில் காணலாம். (த-185)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1949 - 04 - 22



மறைவு
2004 - 10 - 23

## அமரர் ஐயாத்துரை கந்தலிங்கம்

திதி: 12-10-2005 விஜயதசமி

அறுசுவையோடு பாசத்தை அமுதாக ஊட்டினீர்களப்பா
பக்குவமாய் நாமுயர அயராது உழைத்தீர்களப்பா
பாதியிலே எமைவிட்டு பரமனடி சேர்ந்தீர்களப்பா
எப்போதும் எம்மோடு உயிராக வாழ்வீர்களப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான். - குடும்பத்தினர்.

(41258) (24-32-16-15)

# யாழ்ப்பாணப் பிரதேச கலாசார விழா - 2005

இடம் :- யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் :- இன்று (12.10.2005) புதன்கிழமை
நேரம் :- பிற்பகல் 2 மணி

**தலைவர்:**
திரு.ம.பற்றிக் டிறஞ்சன் (பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்)

**பிரதம விருந்தினர்:**
உயர்திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர்,மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

**கௌரவ விருந்தினர்:**
திரு.பா.செந்தில்நந்தனன் (மேலதிக அரசாங்க அதிபர், (சுனாமி) மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
திரு.சி.வி.கே.சிவஞானம் (ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்)
திரு.சூ.சொலமன் சிறில் (மாவட்டச் செயலாளர், தேசிய எழுச்சிப் பேரவை யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.க.இராசதுரை (அதிபர்,யாழ்.மத்திய கல்லூரி)
திருமதி க.பொன்னம்பலம் (அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)
திரு.பொ.சண்முகசுந்தரம் (செயலாளர், மாவட்ட கூட்டுறவுச்சபை, யாழ்ப்பாணம்)
திரு.இ.ஜெயராசா (தலைவர், வணிகர் கழகம், யாழ்ப்பாணம்)

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
மௌன வணக்கம்
மங்கள இசை
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்பு நடனம் (மாணவிகள், யா/வேம்படி மகளிர் கல்லூரி)

வரவேற்பு உரை: திரு.சி.எம்.நெல்சன்
(கலைமேம்பாட்டுச்செயலாளர், கலாசார பேரவை, யாழ்ப்பாணம்.)

ஆசியுரை: பிரம்மஸ்ரீ சந்திராஸ்ரீபதிக் குருக்கள்
அருட்தந்தை ஜோன் மௌலீஸ் அடிகள்
மௌலவி அலாவுத்தீன் பேஷ் இமாம்

தலைமையுரை
கௌரவ விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை

கிராமிய நடனம்
(மாணவிகள், யாழ்/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)
நடனம்
(யாழ். திருமறைக் கலாமன்றம்)
கோலாட்டம்
(மாணவிகள், யாழ்/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்)
கலைஞர் கௌரவிப்பு
இசைகானம்
(நியூ வீணா கானம் வழங்கும் வாத்திய பிருந்தா)
பரிசளிப்பு
மீனவ நடனம்
(மாணவர்கள், யாழ்/மத்திய கல்லூரி)
நாட்டுக்கூத்து "பண்டாரவன்னியன்"
(யாழ்/பிரதேச கலாசார பேரவைக் கலைஞர்கள்)
நாடகம் "அழுகுரல்கள் தொடருமா"
(மாணவிகள், யாழ்/சென் ஜேம்ஸ் வித்தியாலயம்)
நன்றியுரை
செல்வி மிலாசினி அப்புத்துரை (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கலாசார பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(41250) (24-32-16-15)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**நதியா நகை மாடம்**
இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 3479
உங்கள் ஆதரவிற்கு நன்றி.

கிளை
நதியா நகைமாடம்
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வினோ நகைப்பூங்கா**
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185, 177/4. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
185, 177/4, Kasthuriyar Road, Jaffna
T.P: 021-2225394 Fax: 0212222824

**அசோகா நகை அகம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

சண்டிலிப்பாய் ஐடியல் கல்வி நிறுவனத்தின் வாணிவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் விசேட பூசைகளுடன் மாணவர்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளது. (13)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.12

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வாணி விழாவும், கலைநிகழ்வுகளும் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் எஸ்.சிறிகாந்தன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203-13)

* * *

ஏழாலை,ஒக்.12

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய வாணி விழாவும் கலை நிகழ்வுகளும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாணிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

தொடர்ந்து சிறுவர்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு நடைபெறும். (203-45)

* * *

நவாலி,ஒக்.12

நவாலி அத்திரான் முருகமூர்த்தி ஆலய விஜயதசமிவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் முருகப்பெருமான் திருவீதியுலா வருகைதந்து மாலை 7 மணியளவில் வாழைவெட்டுத் திருவிழா நடைபெறும். (203-100)

* * *

குருநகர்,ஒக்.12

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் வாணி விழா இன்று புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

* * *

தென்மராட்சி,ஒக்.12

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வாணி விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நகரசபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசிரியர் அ.வாசுதேவாவின் "சக்தியின் மகிமை" என்ற தலைப்பிலான சொற்பொழிவும் சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (203-117)

* * *

கோண்டாவில்,ஒக்.12

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் மானம்பு திருவிழா இன்று புதன்கிழமை மாலை 7 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறும். (203-49)

* * *

முழங்காவில்,ஒக்.12

ஜெயபுரம் முருகன் ஆலயம், வரசித்தி விநாயகர் ஆலயம், பாலையடி சித்தி விநாயகர் ஆலயம், குமுழமுனை அம்மன் ஆலயம் ஆகியவற்றில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை விஜயதசமி தினமன்று வாழை வெட்டு திருவிழா நடைபெற்று நவராத்திரி பூசைகள் நிறைவடையும். (323-203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

வண்ணார்பண்ணைச் சிவன் ஆலய நவராத்திரி பூசைகள் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை வாழை வெட்டு திருவிழாவுடன் நவராத்திரி விழா நிறைவடையும். (203)

* * *

முழங்காவில்,ஒக்.12

முழங்காவிலில் உள்ள செல்வயோக சித்தி விநாயகர் ஆலயம், செல்லக் கதிர்காமம், முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றில் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் நவராத்திரி பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இறுதிநாளான இன்று புதன்கிழமை விஜயதசமியுடன் நவராத்திரி விழா நிறைவடையும்.(323-203)

* * *

நல்லூர்,ஒக்.12

நல்லூர் பூதவராஜர் ஆலயத்தின் நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது. இன்று புதன்கிழமை மாலை வாழைவெட்டு திருவிழா நடைபெற்று நவராத்திரி விழா நிறைவடையும். (203)

## விவசாயச் சான்றிதழ் பயிற்சி நெறி - திருத்தம்

விவசாயச் சான்றிதழ் பயிற்சி நெறிக்கு ஆள் சேர்ப்பது தொடர்பாக யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தால் கடந்த 08.10.2005 உதயனில் 12 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் -

நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுடன் சமூகமளிக்குமாறு கோரப்பட்டிருப்பது தவறு. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பதே சரியானதாகும்.

இறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்ற விடயம் தவறுதலாக அதில் இடம்பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

"தனியார் இந்துப் பாலர் பாடசாலை" Reg No F/08. பொறுப்பாசிரியை சுஜிதா, ஆங்கிலத்தில் கூடிய கவனம். தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(41269)(26-32-16-15)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned posts.

**Faculty of Applied Science- Vavuniya Campus**

Senior Lecturer Grade I/Grade II/Lecturer (Probationary) in Science & Technology

**Preference will be given to those who have**

a. Experience in curriculum development in technology based stream and able to design a degree course in Technology to suite the current need.
b. Experience in teaching Digital electronics, Network Technology and relevant Computer applications.

**Faculty of Arts-University of Jaffna**

Instructor (on Contract) in
Dance (Bharathanatiyam)
Music (ViolinlVeena)

| Post | Salary Point at present | Salary Scale w.e.f 01.01.2006 |
|---|---|---|
| Senior Lecturer Grade I | Rs.28,150/- p.m. | Rs.32650-8x525-36850p.m. |
| Senior Lecturer Grade II | R,s.24,192.50p.m. | Rs.28225-4x735; 1x620-31785 p.m. |
| Lecturer (Probationary) | Rs,15,685/-p.m. | Rs.18300-1x525-9x585-24090/-p.m. |
| Instructor (On contract) | Rs,12750/-p.m. (fixed) | |

Other allowances approved by University Grants Commission will also be paid.

**Closing Date** to entertain the applications
Faculty of Applied Science- Vavuniya Campus - 30.11.2005
Faculty of Arts-University of Jaffna - 30.10.2005

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments either in person or by post, on a payment of Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour, of the **Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10 c.m.** in size.

Those who wish to apply far **more than one post** should apply in **separate application forms.**

Applicants from the University System/Government Departments/. Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation

**REGISTRAR**
**2005 10.10**

(C/455560)

# 10 ஆவது பிறந்த நாள் நினைவுகூரல்




10ஆவது பிறந்தநாள் நினைவை முன்னிட்டு கல்விசார் செயற்பாடுகள் முன்னெடுக்கவிருக்கின்றன.

* விசேட புலமைப் பரிசில் வினா விடை வகுப்பு இலவசமாக நடத்தப்படும். ஆசிரியர் S.திலகன்.

* O/L 2005 இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு யாழ்.முன்னணி ஆசிரியர்களான கணிதம்-C.K.B.தயாளன், B.ரூபன், விஞ்ஞானம் - T.டார்வின் ஆகியோரால் இலவசமாக மாதத்தில் 30 மணித்தியாலங்கள் Paper class நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் அனைவரும் கட்டணம் எதுவும் இன்றி இலவசமாகக் கற்கலாம்.

அனுமதிக்கான பதிவை 15ஆம், 16ஆம் திகதிகளில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**யாழ் .கல்வி நிலையம்,**
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.T.P.021222 7261.

பொன்னையா லேன்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
T.P.021222 6293.

நினைவுகூருவோர்:
திரு.திருமதி N.T.S. சுபநாதன் அர்ஜன் மற்றும் உறவுகள்.

(41227)(-16)

# யாழ். மத்திய கல்லூரி அணி வடக்கு மாகாணச் சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, விளையாட்டு அமைச்சினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் 18 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வடக்கு மாகாணத்துக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து மன்னார் பத்திமா மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்[illegible]ார் பத்திமா மத்திய மகாவித்தியால[illegible] ஓவர்களில் சகல விக்கெட்[illegible]க்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

எம்.திலீபன், மதன்பெரேவா ஆகியோர் தலா 5 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

வியாசன் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் மயூரன் 16 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

என்.நவநீத் 13 ஓட்டங்களையும், டபிள்யூ. கிறிஸ்ரி யோண்சன் ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களையும் கே.செல்ரன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சுவிகரன் 17 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக யாழ். மத்திய கல்லூரி வீரன் கே.செல்ரனும் - சிறந்த பந்து வீச்சாளராக யாழ். மத்திய கல்லூரி வீரன் ஜே. வியாசனும் - சிறந்த களத்தடுப்பாளராக மன்னார் பத்திமா மத்திய மகா வித்தியாலய வீரன் விவேக்லம்பேட்டும் - சகலதுறை வீர னாக யாழ். மத்திய கல்லூரி வீரன் கிறிஸ்ரி ஜேண்சனும் தெரிவுசெய்யப்பட்டனர். (3-190)

## கூடைப்பந்தாட்ட ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பெண்கள்**

காலை 7.30 மணி - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி -

**ஆண்கள்**

பிற்பகல் 4.30 மணி - யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி (3-1[illegible])

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். சைவபரிபால சபையின் முன்பள்ளி விளையாட்டுவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான எண் அடுக்குதல், வர்ணம் தீட்டுதல், நிறம் தெரிதல், வேக நடை, தாரா நடை போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.(3-203)

## இணுவிலில் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.12

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் லக்கி வீடியோ கொம்பிளக்ஸின் அனுசரணையுடன் 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மாபெரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டுமெனவும் -

பெஷன் ஹவுஸ், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், விதுஷன் அழகுமாடம், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம், லக்சுமி உணவகம், கே.கே.எஸ். வீதி, இணுவில்ஆகிய இடங்களில் பதிவுக் கட்டணமாக 100 ரூபாவைச் செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தினர் தெரி வித்துள்ளனர். (3-203)

## விளையாட்டு

## நாளைய ஆட்டங்கள்

வலி.தெற்கு,ஒக்.12

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர் அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தற்போது நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை 8.30 மணி**

**14 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் பிரிவு** - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

**16 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் பிரிவு** - மயிலணி இந்து மகாவித்தியாலயம் எதிர் ஏழாலை மகாவித்தியாலயம் -

இணுவில் மத்திய கல்லூரி எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**பிற்பகல் 2.30 மணி**

**16 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் பிரிவு** - இணுவில் இந்துக் கல்லூரி எதிர் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

**18 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் பிரிவு** - ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் மயிலணி இந்து மகாவித்தியாலயம். (3-152)

## அரியாலை கரபந்தாட்டம் ஆவரங்கால் அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அரியாலை இளைஞர்களால் நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள எட்டு முன்னணி விளையாட்டுக் கழகங்களைத் தெரிவுசெய்து நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதின.

ஐந்து செற்கொண்ட இச் சுற்றுப்போட்டியில் முதல் இரு செற்களையும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 25:16, 25:19 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற மூன்றாவது செற்றில் பலத்த போட்டியின் மத்தியில் 26:24 என்ற புள்ளிகள் பெற்று காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற 4 ஆவது சுற்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 25:19 என்ற புள்ளி அடிப்படையில் வென்று 3:1 என்ற செற்கணக்கில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இச்சுற்றுப் போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.செல்வமகிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (3-410)

## தென்மராட்சியில் தாச்சிப் போட்டி

தென்மராட்சி,ஒக்.12

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 11 வயது ஆண் பிரிவு அணிகளுக்கிடையிலான தாச்சிச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 24, 25 ஆகிய திகதிகளில் காலை 8 மணிதொடக்கம் நடைபெறவுள்ளன.

24ஆம் திகதி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் - 25ஆம் திகதி கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்திலும் போட்டிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

---

# தேசியப் பிரச்சினைகளுக்குப் பிரதமர் முன்வைக்கப்போகும் தீர்வுதான் என்ன?

## இப்போதாவது தெளிவுபடுத்தக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.12

கட்சியின் கொள்கை விளக்கமும் எதிர்கால வேலைத்திட்டமும் இல்லாமல் பிரதமர் மேற்கொண்டுவரும் தேர்தல் பிரசார நடவடிக்கை பிசுபிசுத்துப்போய்விட்டது. பிரதமரின் முன்னுக்குப்பின் முரணான பேச்சுகளும் அவ்வப்போது அவர் வெளியிட்டுவரும் கருத்துகளும் நாட்டுமக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலையிலாவது தேசியப் பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்போகும் தீர்வு என்ன? இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணப்போகின்றார்? அவருடைய தேசிய பொருளாதாரக் கொள்கை என்ன? என்ற கேள்விகளுக்கான தனது நிலைப்பாட்டைப் பிரதமர் நாட்டுமக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டும் என ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றின் போதே திஸ்ஸ அத்தநாயக்க இப்படிச் சவால் விடுத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியா? அல்லது ஜே.வி.பியினரின் பிரதிநிதியா? என்ற விடயமே கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சு.கட்சியின் மூத்த உறுப்பி நம், வெளிவிவகார அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க தேசியப் பிரச்சினைகள் தொடர்பாகப் பிரதமரின் கொள்கைத்திட்டம் என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளார். அவரது கேள்வி நியாயமானது. அதையே நானும் கேட்கின்றேன்.

58 வருட கால சுதந்திர இலங்கையில் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்று இல்லாமல் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு சாதனை படைத்துவிட்டார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இனவாதக் கட்சிகளுடன் இணைந்து கட்சியின் கொள்கைகளையே அடைவுவைத்துவிட்டார் அவர். தனது சுயநலனுக்காக இவ்வாறே நாட்டையும் காட்டிக்கொடுத்து விடுவாரோ என வெளிவிவகார அமைச்சரே சந்தேகம் கிளப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா சுதந்திரக் கட்சியின் தலைவி மட்டுமல்ல நாட்டிற்கும் தலைவி. அவருடைய வெறுப்பையும் பிரதமர் சம்பாதித்துக்கொண்டார். இதனால், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையே தயாரிக்க முடியாமல் பிரதமர் தடுமாற்றம் அடைந்துள்ளார்.

அதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டபோது சர்வதேச அமைப்புகளும், சர்வதேச அரசுகளும் வழங்கிய நிதியில் 13.9 வீதம் மட்டுமே இதுவரை செலவிடப்பட்டுள்ளது. எனக் கணக்காய்வாளர் நாயகம் குற்றஞ்சுமத்தியுள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி தவறான முறையில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் அகதி முகாம்களில் இருக்கின்றனர். பிரதமர் இவர்களின் கோபத்திற்கும் ஆளாகிவிட்டார் என்று ஐ.தே.க. பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (க-3)

## ரூபாவின் பெறுமதி திடீர் அதிகரிப்பு!

கொழும்பு,ஒக்.12

நாணய மாற்று விகிதத்துக்கமைய அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு சமமான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை நாணயத்தில் 101.42 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி மறுநாள் புதன்கிழமை 101.35 ரூபாவாக மாற்றமடைந்துள்ளது.

நாட்டின் சிறுபான்மையினக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இ.தொ.காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தமையே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விரு சிறுபான்மையினக் கட்சிகளும் உள்ளூர் வர்த்தக சந்தையில் பெரும் பங்கு வகிப்பவையாகும். இதன்படி எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது.

நாட்டின் கிழக்குக் கடற்பகுதியில் எரிபொருள் வளம் உள்ளதா எனக் கண்டறியும் முயற்சியை இந்த டொலரின் பெறுமதி வீழ்ச்சி எந்தவிதத்திலும் பாதிக்காதென நோர்வே நாட்டு நிறுவனமொன்று வெளியிட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(3-205)

## அரசிலிருந்து விலகியது இ.தொ.கா.

கொழும்பு,ஒக்.12

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அரசில் அங்கம் வகித்தவர்களான அமைச்சர் முத்து சிவலிங்கம், பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி ஆகியோர் தமது இராஜினாமாக் கடிதங்களை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின்னர் தமது இராஜினாமாக் கடிதங்களை அவரிடம் கையளித்தனர். இ.தொ.கா. உறுப்பினர்கள். இதுவரைகாலமும் தமக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்குக் கட்சியின் சார்பில் ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்க இ.தொ.கா. தீர்மானித்ததையடுத்து அரசில் இருந்து விலகி அமைச்சுப் பொறுப்புகளை ராஜினாமாச் செய்ய அக்கட்சி முடிவு செய்தது. எனினும், அதன் பிரதியமைச்சர்களில் ஒருவரான பைஸல் முஸ்தபா தனது பதவியை இராஜினாமாச் செய்யவில்லை. (க-3)

## ஐரோப்பிய ஒன்றியத் தடை அரசுக்குக் கிடைத்த வெற்றி

### அனுரா கூறுகிறார்

கொழும்பு, ஒக்.12

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பயணத்திற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விதித்த தடை இலங்கை அரசிற்குக் கிடைத்த வெற்றியென்று வெளிவிவகார அமைச் சர் அனுர பண்டாரநாயக்க தெரிவித்திருக்கிறார்.

தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டார் அமைச்சர். புலிகள் மீதான பயணத்தடைக்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்குத்தான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார் எனவும் சுட்டிக்காட்டினார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறிவந்த புலிகள் இறுதியில் எமது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலைசெய்து அரசுக்கெதிராகப் போர்ப் பிரகடனமொன்றைச் செய்தனர். இதனையடுத்து, நாம் வழங்கிய அழுத்தங்களைக் கவனத்திற்கொண்டு ஐரோப்பிய சமூகம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. அதனை வரவேற்கிறோம்.

போர்நிறுத்த அமைதி ஒப்பந்தத்தைச் செம்மையாக அமுல்படுத்துவது சம்பந்தமான பேச்சுகளை இலங்கையிலேயே நடத்த வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். பேச்சுகளுக்காக வெளிநாட்டுக்குச் செல்வதில் எமக்கு ஆர்வமில்லை.

- இவ்வாறு மேலும் குறிப்பிட்டார் அமைச்சர் அனுர பண்டாரநாயக்க. (க-3)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் : 08.03.1940

விண்ணில் : 12.09.2005

அமரர்

## ஆசீர்வாதம் தோமஸ்

பாசமிகு கணவரே! அன்பு மிகு தந்தையே!
ஆருயிர் மாமாவே! எம்மருமைத் தாத்தாவே!
எல்லார்க்கும் எல்லாமாய் இருந்த எம் குல விளக்கே!
செழுமையுடன் நாம் வாழ சீர்வழி செய்தவரே
ஆண்டவர் படைப்பினிலே அரும்படைப்பே உம் பிறப்பு
பெருமிதமாய் நாம் கூற உறவெல்லாம் மெய் சிலிர்க்க
உம்படைப்பு சிறப்பு மிக்க தென்றறிந்த அந்த
இறைவனும் அவசரமாய் தம்மன்றை அழைத்துச் சென்றானோ?
ஆறவும் முடியவில்லையே...
உம் ஆத்மா எம் நேச தேவனைத் துதிக்கின்றோம்.

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.

(40536)(51-)

### சூழல் நல்லாட்சி ஆணையகத்தின் ஏற்பாட்டில்

# சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வன்னியில் தீவிர நடவடிக்கை

புதுக்குடியிருப்பு,ஒக்.12

வன்னிப் பிரதேசம் எங்கும் சூழல் நல்லாட்சி ஆணையகம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

மாவட்ட ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் அந்தந்தப் பிரதேச சபைகள் மூலமாகப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டன.

சூழலுக்குக் கேடு விளைவிக்கும் [illegible] துத் திண்மக் கழிவுகளையும் [illegible] மீள்பயன்பாட்டிற்கு உட்படுத்துதல், இதனால் ஏற்படும் நன்மை, தீமைகள் குறித்து வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

முல்லைத்தீவுப் பிரதேச சபை உள்ளூராட்சித் திணைக்களம், புதுக்குடியிருப்பு, துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச சபைகள் தமது பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டன.

உணவகங்களில் பயன்படுத்தப்படும் பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக வாழை இலை, தாமரை இலை போன்ற விரைவில் உக்கக்கூடிய பொருள்களைப் பாவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலில் காணப்படும் பிரிகையடையாத கண்ணாடிகள், பொலித்தீன்பைகள், பிளாஸ்ரிக் என்பவற்றை அகற்றுவதில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

மாணவர்கள், வீடுவீடாகச் சென்று துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததுடன் சூழல் பாதுகாப்புத் தொடர்பான அறிவுறுத்தலையும் வழங்கினர்.

அந்தந்தப் பிரதேச சபையினர் ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்குக் கருத்தூட்டல்களை வழங்கினர்.

அத்துடன், மரங்கள் நடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

(த-353-204)

## மோசமான நிலையில் பன்னங்கண்டி வீதி

கிளிநொச்சி,ஒக்.12

கிளிநொச்சி, கோவிந்தன் கடைச்சந்தியில் இருந்து பன்னங்கண்டிப் பாலம் வரையான பாதை இரவுநேர போக்குவரத் துக்கு ஆபத்தான நிலையில் காணப்படுகின் றது.

இவ்வீதி திருத்தம் செய்யப்படுகின்றபோதும் அதன் அருகே ஆழமான வாய்க்கால் உள்ளது. வீதி செங்குத்தான சாய்வாக வாய்க்கால் பக்கம் சரிவதனால் மக்கள் இரவுப் பயணங்களின்போது தவறி வாய்க்காலுக்குள் விழுகின்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

வீதிக்கும் வாய்க்காலுக்கும் இடையே தடுப்புச் சுவர்கள் அல்லது தடைவேலிகள் அமைக்கப்படாதவிடத்து எதிர்வரும் மழை காலங்களில் மக்களின் இரவுப் பயணம் ஆபத்தானதாகவே இருக்கும் என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (த-301)

## ஆபத்தான நிலையில் பாலம்!

வட்டக்கச்சி,ஒக்.12

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் ஆபத்தான நிலையில் உள்ளது. கிளிநொச்சிக் குளத்தில் இருந்து நீர் வெளியேற்றப்படும் துருசுக்கு மேலாக உள்ள பாலமே இவ்வாறு ஆபத்தான நிலையில் உள்ளது.

பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் மட்டுமன்றி பாரவூர்திகள் மற்றும் பல கனரக வாகனங்கள் செல்லும் பிரதான வீதியில் உள்ள இப்பாலம் நீண்டநாள்களாக இவ்வாறான நிலையில் உள்ளபோதும் இது கவனிக்கப்படாத நிலையில் உள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-405)



இதுதான் அந்தப்பாலம்
(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வட்டக்கச்சி,ஒக்.12

கிளிநொச்சி மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் 'யுனிசெவ்' நிறுவன உதவியுடன் மாற்றீடான வலுவுள்ள மாணவர்களுக்கும் மாற்றீடான வலுவுள்ள பெற்றோரைக் கொண்டுள்ள மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த மாதம் 28ஆம் திகதி மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து 500 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதுபோன்றே அன்றையதினம் கண்டாவளைத் தொடர்பகத்திலும், பூநகரித் தொடர்பகத்திலும் வைத்து அந்தப் பிரதேச மாணவர்களுக்கான கற்றல உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே, இச்சங்கத்தின் ஏற்பாட்டில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டமையும் தனியார் வகுப்புகளுக்கான கட்டணங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(த-405)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

## புதுக்குடியிருப்பிலும் தற்காப்புப் பயிற்சி

புதுக்குடியிருப்பு,ஒக்.12

புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களுக்குத் தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன் கிழமை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினைப் பிரதேச செயலர் சி.தயானந்தா ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(த-353-202)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடுகு வழங்க நடவடிக்கை

புதுக்குடியிருப்பு,ஒக்.12

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு அவர்களின் வீட்டுக் கூரைகளை வேய்வதற்கென கிடுகுகள் வழங்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதற்கென ஒரு லட்சத்து 45ஆயிரம் கிடுகுகள் தேவைப்படுகின்றன. இந்தக் கிடுகுகளைக் கொள்வனவு செய்வதற்குக் கேள்வி அறிவித்தல் விடுக்கப்பட்டு அந்தந்தப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகக் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-353-202)

## முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு கிளிநொச்சியில் அறிமுக அட்டை

கிளிநொச்சி,ஒக்.12

கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சாரதிகளுக்கு அறிமுக அட்டை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி அரசசார்பற்ற நிறுவனக் கேட்போர் கூடத்தில் சங்க செயலாளர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இந்த அறிமுக அட்டை வழங்கப்பட்டது.

வன்னிப் பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களின் மீது மக்களின் நம்பகத் தன்மையை மேம்படுத்தவும், முச்சக்கரவண்டிச் சங்க உறுப்பினர்களின் ஒழுங்கு முறைகளைப் பேணவும் இது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிளிநொச்சி புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கோகுலன், கிளிநொச்சி நகர காவல் துறைப் பொறுப்பாளர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு அறிமுக அட்டைகளை வழங்கினர். நேற்று முதல் இந்த அறிமுக அட்டை நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

(த-301)

## கட்டடவேலைகள் பூர்த்தியடைந்ததும் பாவனைக்கு அனுமதிக்காதது குறித்து விசனம்

ஒட்டுசுட்டான்,ஒக்.12

கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. எனினும், சம்பந்தப்பட்ட கட்டடங்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என மாணவர்களின் பெற்றோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் வகுப்பறைக் கட்டடங்கள் இன்றி மரநிழல்களிலேயே கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் அவற்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

மழைகாலத்தைக் கருத்திற்கொண்டு புதிய கட்டடங்களை விரைவில் திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் 'என்றும் - பெற்றோர்கள் கோரியுள்ளனர். (எ-341-202)

## மணல், கிரவல் ஏற்றிச் செல்வோருக்கு காவல்துறையினர் விசேட அறிவிப்பு

வட்டக்கச்சி,ஒக்.12

வீதிகளில் மணல், கிரவல், சல்லி போன்றவற்றை ஏற்றிச்செல்லும் வாகனச் சாரதிகளுக்குத் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிவித்தலின் மேற்படி பொருள்களை ஏற்றிச் செல்லும்போது அவ்வீதியால் செல்லும் ஏனைய வாகனங்களுக்கும் உந்துருளி, துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் ஏற்றிச்செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்காக அவற்றை தறப்பாள் போன்றவற்றால் மூடிக்கட்டிச் செல்லுமாறும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.ஏற்றிச்செல்லப்படும் மணல் காற்றில் பறந்து ஏனையோருக்கு இடையூறு விளைவிப்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது.

(த-405)

## இலத்திரனியல் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

வட்டக்கச்சி,ஒக்.12

கிளிநொச்சி ரி.ஆர்.ரெக் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள இலத்தினியல் கற்கை நெறிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் இக்காற்கைநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது. ஆறுமாதகாலப் பயிறிசியைக் கொண்ட இக்கற்கை நெறிக்கு ஜீ. சி. ஈ. உயர் தரத்தால் பௌதிகவியல் கற்ற மாணவர்களுக்கும், ஜீ. சி. ஈ. சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி பெற்றவர்களுக்கும் முன்னு ரிமை வழங்கப்படும் என்று ரி. ஆர். ரெக் நிறுவனத்தினர். தெரிவித்துள்ளனர்.

(த-405-203)



கண்டாவளை மகாவித்தியாலயத்திற்குப் புதிய நுழைவாயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதன் திறப்புவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள் தேசியக் கொடி ஏற்றுவதை முதலாவது படத்திலும் -

நுழைவாயிலை அமைத்துக் கொடுத்த வள்ளல் வீரசிங்கம் நாடாவெட்டி நுழைவாயிலைத் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். வித்தியாலய அதிபர் ஸ்ரீதரனும் படத்தில் உள்ளார்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# S.L.P.S II,III

அதிபர் தரத்திற்கான போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புகள்

கல்விக் கொள்கை நிர்வாகம் :- திரு.நல்லையா
(Rtd. மேல்மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்)
கிரகித்தல் :- பேராசிரியர் திரு.சண்முகதாஸ்
நுண்அறிவு :- திரு.குமாரவேல்

**புதிய பிரிவு ஆரம்பம்: 15.10.2005 (2 மணி)**
குறிப்பு:- (அதிபர் தரம் III இற்கு கிரகித்தலும் நுண்அறிவும் மட்டும்)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (41220)(32-19-45-42)

---

உ
அம்பாள் துணை

கல்வியங்காடு
அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில்

# கேதார கௌரி காப்பு

அம்பிகை அடியார்களே!
இம்முறையும் வழமைபோல் மேற்படி ஆலயத்தில் கேதார கௌரி காப்பு வழங்கப்படும். கேதார கௌரி காப்புபெற விரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.
ஆரம்பம் இன்று [12.10.2005] புதன்கிழமை. எதிர்வரும் 01.11.2005 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி விஷேச பூசையைத் தொடர்ந்து கௌரி காப்பு வழங்கப்படும்.

சு.பாலசுப்பிரமணியஐயர்,
ஆலய உரிமையாளரும்,
ஆதீன கர்த்தாவும்.

(41235)(42-19-45)

---

## பூநகரி ஆலயத்தில் கௌரி விரத ஏற்பாடு

பூநகரி ஜெயபுரம் வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை கேதாரகௌரி நோன்பு விரதம் ஆரம்பமாகவுள்ளது.

விரதம் அனுஷ்டிப்பவர்கள் அதற்கான காப்பைப் பெறுவதற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என பிரதம குரு கேட்டுள்ளார். (3-323-203)

---

## விற்பனைக்குண்டு

1. போட்டோ பிரதி இயந்திரம் (புதியது) டிஜிற்றல் மொடல் பக்ஸ், ஸ்கானர், பிறின்ரர் இணைந்தது.
2. DVD பிளேயர் செற் (புதியது), மைக்றோபோன், 7 சிறிய BOX, 2 பெரிய BOX இணைந்தது.

தொடர்புகளுக்கு:
**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்,**
194, நாவலர் றோட்,
புகையிரதக் கடவை லேன்,
யாழ்ப்பாணம்.
(41243)(42.19.45) T.P.: 021 222 8368.

---

## தேவை

முன் அனுபவமுள்ள
1. தேநீர் தயாரிப்பவர்
2. சமையல் உதவியாளர்
3. உணவு பரிமாறுபவர்

உடன் தேவைப்படுகின்றனர். தகுதியுடையோர் நேரில் சமுகம்தரவும் - தகுதி, திறமைக்கு ஏற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

நிர்வாகி,
பாம் பீச் றெஸ்ரோறன்ற்,
10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(விவேகானந்தா அச்சகம் முன்பாக).
(41200)(32.19.45.42)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாந்தலிங்கம் வெற்றிவேலுப்பிள்ளை
(B.A.DIP.IN.Edu. M.A.)



எமது வித்தியாலய உயர்தர ஆசிரியர் திரு. சாந்தலிங்கம் வெற்றிவேலுப்பிள்ளை அவர்கள் முதுகலைமாணி பட்டம் பெற்றதையிட்டு 2005 உயர்தர மாணவர்கள் ஆகிய நாம் அவரை உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டம் பதவிகளைப் பெற்று கல்வி உலகில் ஒளிவீசிப் பிரகாசிக்க நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
2005 உயர்தர மாணவர்கள்,
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.
(41257)(42-19-45)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற குமரகோட்டம், கோண்டாவிலைச் சேர்ந்த பின்வருவோரை வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

1. ப.சதீஸ்கரன் B.A.Hons
2. அ.சந்திரகுமார் B.A.Hons
3. ப.சிவகரன் B.A.Hons
4. யோ.தயாபரன் B.A.Hons
5. ப.ஜெயகுமார் B.A.Hons
6. த.தர்மநிதி B.A.Hons
7. யோ.கார்த்திகா B.A.Hons
8. ப.மகாலட்சுமி B.B.A.Hons
9. து.துஸ்யன் B.Sc (Agriculture)

குமரகோட்டம்,
கோண்டாவில்.
- நண்பர்கள்.
(41256)(42.19.45)

---


18 +plus Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

18 Plus இன் இரட்டிப்பு போனஸ்




மிகவும் வசீகரமான, இளம் பருவத்தினரின் சேமிப்பு திட்டத்தில் இன்றே சேமியுங்கள்.
நவ நாகரிகமான Document Holder ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய இளைஞர்களுக்கான வசீகரமான சேமிப்பு திட்டம் 18 Plus கணக்கு ஆகும்.

இச்சேமிப்பு திட்டமானது ஏனைய சேமிப்பு கணக்குகளை விட உயர்ந்த வட்டி வீதமும் பல வகையான அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

கல்லூரி, பல்கலைகழகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கான Document Holder ஒன்று மேலதிக இலவசமாக வழங்கப்படும்.

இந்த நாகரிகமான Document Holder ஐ பெறுவதற்கு இன்றே நீங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கியில் ஆகக் குறைந்த தொகையான ரூபா. 5000/-* வைப்பிலிட்டு புதிய 18 Plus கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

விரையுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

*விதிமுறைக்களுக்கமைய

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

Twin Advertising

# புத்தூரில் அடித்துக் கொல்லப்பட்டவரது மரணத்தில் இராணுவத்துக்கு சம்பந்தமா?

## இறந்தவரின் மகன் மனித உரிமைக் குழுவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

புத்தூர் கிழக்கில் கடந்த வெள்ளியன்று இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தவரின் மரணத்தில் இராணுவத்தினருக்குத் தொடர்பு உண்டா?

- இவ்வாறு சந்தேகம் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை இறந்தவரின் மகன் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளார்.

ஞானப்பிரகாசம் கிருபரட்ணம்(வயது 57) என்பவரே கடந்த வெள்ளி இரவு பலமாகத் தாக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார். இவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக அவரது புதல்வர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டிருக்கிறார்.

புத்தூர் கிழக்கில் இராணுவ முன்னரங்க நிலைகளுக்கு மிகவும் கிட்டிய ஓர் இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பது அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இறந்தவருக்கு அவரது ஊரிலோ, அயலிலோ விரோதிகள் எவரும் இல்லை என்பதையும் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மரணம் தொடர்பான உண்மை நிலைவரத்தைக் கண்டறிந்து தெரியப்படுத்துமாறு அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டிருக்கின்றார். (ஐ-203)

# ஆடு வளர்ப்புக் குறித்த பயிற்சிக் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, ஒக்.12

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினால் ஆடு வளர்ப்பு தொடர்பான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த 4ஆம் திகதி சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இப் பயிற்சிக் கருத்தரங்கில் 32 ஆட்டுப் பண்ணையாளர்கள் கலந்துகொண்டனர். உடுவில் கால்நடை வைத்திய அதிகாரி இதில் கலந்துகொண்டு ஆடு வளர்ப்புப் பற்றிக் கருத்துரை வழங்கினார். (த-135)

# வழுக்கியாறு கிராய்க்குள வாய்க்கால்களில் கழிவுப் பொருள்களைப் போடவேண்டாம்

## விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வலி.தென்மேற்கு,ஒக்.12

வழுக்கையாறு பிரதான வாய்க்கால்களிலும் மற்றும் கிராய்க்குள வாய்க்கால்களிலும் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும், ஏனையோரும் பொலித்தீன் பைகள், புல்லுக் கற்றைகள் மற்றும் கழிவுப் பொருள்களைப் போடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்திய காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத் தலைவர் சி. பொ. மா. க. முதலியார் தலைமையில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில் உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:-

- காலபோக நெல்விதைப்பை இம்மாதம் 6ஆம் திகதி ஆரம்பித்து 15 ஆம் திகதிக்கு முன் முடித்துக்கொள்ளவேண்டும்.
- விதைப்பு ஆரம்பித்த பின்பு வயல் காணிகள் ஊடாக உழவு இயந்திரம் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
- விதைப்பு ஆரம்பித்து அறுவடை முடியும் காலம் வரை ஆடு, மாடுகளைக் கட்டி வளர்த்தல் வேண்டும். மந்தை பட்டி வைத்திருப்போர் அவற்றை வயல் காணிகளுக்கு ஊடாக கொண்டு செல்வது தவிர்க்கப்படல் வேண்டும்.
- கட்டாக்காலி மாடு, ஆடுகளைப் பிடிப்பதற்கு பிடிகாரர் நியமிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்கி உதவவேண்டியது அவசியம்.

(த-135)

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியருக்கு நியமனம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.12

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண புதிய ஆங்கில ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு -கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

சங்கத்தின் தலைவர் சி.ஞானகரன், பொருளாளர் ச.சிறிரெங்கநாதன் உட்பட்ட குழுவினரே அண்மையில் கல்வி அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்தனர்.

அமைச்சின் சார்பில் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், சிரேஷ்ட உதவிச் செயலாளர், எம்.கே.எம்.ஹனிபா, திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சரவணபவன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட ஒப்பந்த ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நீண்டகாலம் பணியாற்றிய ஆசிரியர்கள் நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கப்பட வேண்டியதன் அவசியம் என்பன குறித்து இச்சந்திப்பில் எடுத்துக்கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-202)

# அரச ஊடகங்களில் கொள்கை விளக்கம்; இன்று தேர்தல் திணைக்களத்தில் கூட்டம்

கொழும்பு,ஒக்.12

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்களுக்கும் அரச வானொலிச் சேவை ஊடாகவும் தேசிய ரூபவாஹினிச் சேவை ஊடாகவும் தமது கருத்துக்களையும் கொள்கைகளையும் முன்வைக்கும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக இன்று தேர்தல் ஆணையாளரின் தலைமையில் தேர்தல் செயலகத்தில் கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

இந்த இரு சேவைகள் மூலம் தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேட்பாளர்களுக்கும்15 நிமிட நேர கால அவகாசங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. ஆயினும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் 15 நிமிடங்கள் வீதம் எத்தனை மணித்தியாலங்கள் வழங்கப்படுமென்பது பற்றிய தீர்மானம் கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்படும். (3-206)

# யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடிப் படையணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். உபபிராந்திய அலுவலகம் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் தோறும் சுற்றாடல் முன்னோடிப் படையணிகளை உருவாக்கிவருகின்றது.

இதுவரை யாழ்.மாவட்டத்தில் 100 பாடசாலைகளில் இந்தப் படையணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்களின் தலைமையில் ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் இப்படையணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பதக்கம் செயல்முறை, சூழல் பாசறைகள், சூழல் பாடம் தொடர்பான பயிற்சிகள், பாடசாலை சுற்றாடல் வேலைத்திட்டம், சூழலுடன் தொடர்புடைய கலாசார நிகழ்வுகள், சூழல் கண்டுபிடிப்புகள் போன்ற பல்வேறு செயல்முறைகளை இப்படையணிகள் நடைமுறைப்படுத்தும்.

1984 ஆம் ஆண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையால் உருவாக்கப்பட்ட இப் படையணிகள் கடந்த ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-202-204)

# நியமனம் கிடைக்காத தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கு!

தென்மராட்சி,ஒக்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக கடமையாற்றி இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காதவர்கள் உடனடியாக வலயக் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (த-117)

# கோண்டாவில் ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை

கோண்டாவில்,ஒக்.12

கோண்டாவில் அரசினர் மத்திய வைத்திய சாலையில் வாய், தொண்டைப் புற்றுநோய் தொடர்பான மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த மருத்துவமுகாமில் புற்றுநோய் தொடர்பான மருத்துவ ஆலோசனைகள் விளக்கங்களை வைத்திய அதிகாரிகள் வழங்கினர்.

இதில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர் என்றும் அவர்களில் அனேகமானவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-49)






ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு, வலி. வடக்கு கடற்றொழில் சமாசங்களுக்குட்பட்ட 284 கடற்றொழிலாளர்களுக்கு ஏ.ஜே.நிறுவனம் அண்மையில் கடற்றொழில் உபகரணங்களை வழங்கியது. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பழகன், ஏ.ஜே. நிறுவன வடக்கு - கிழக்கு இணைப்பாளர் கே.தர்மசீலன் ஏ.ஜே.நிறுவன் படகு இயந்திரத் திருத்தப் பணிப் பொறுப்பாளர் அப்பன் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படங்கள்:சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# டி.ஏ.எம்.பட்டதாரிகளுக்கு அடையாள அட்டை

வளலாய்,ஒக்.12

அகில இலங்கை டி.ஏ.எம்.வைத்தியப் பட்டதாரிகள் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி வருகின்றது. டி.ஏ.எம்.பட்டம் பெற்ற அனைத்து வைத்தியர்களும் தமது சங்கத்தில் பதிவு செய்து அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் வைத்தியர் க.தாமரைச்செல்வன் கேட்டுள்ளார். (த-178)

# கடும் குற்றவாளிகளின் வழக்குகளை சிறைச்சாலையில் விசாரிக்க ஏற்பாடு

## சிறைச்சாலை ஆணையாளர் தகவல்

கொழும்பு,ஒக்.12

அண்மையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவர் உட்பட நால்வர் பாதாள உலகக் கோஷ்டியொன்றினால் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை அடுத்து, கடும் குற்றவாளிகள் தொடர்பான நீதிமன்றச் செயற்பாடுகளைச் சிறைச்சாலைகளின் உள்ளேயே நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் ஆணையாளர் ரூமிமர்சூக், சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகள் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் செயற்பாடுகளுக்கு 30 வாகனங்களை வழங்கவும், மேலதிகமாக சுடுகலன்களை வழங்கவும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகளுக்குப் பாதுகாப்பு வழங்க பொலீஸாரின் ஒத்துழைப்புப் பெறப்படவுள்ளதாகவும்.

பொலீஸார் நெருக்கடியான பணிகளில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில், சிறைக் கைதிகள் தொடர்பான பாதுகாப்புப்பணிகளில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடும் குற்றவாளிகள் நீதிமன்றங்களுக்குக் கொண்டுசெல்லப்படும் சந்தர்ப்பங்களில் பொலீஸாரின் பாதுகாப்பைச் சிறைச்சாலை அதிகாரிகள் எதுவிதத்திலும் கோரியிருக்கவில்லையென்றும் -

சிறைச்சாலைகளிலிருந்து வெளியிடங்களுக்குக் குற்றவாளிகளைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களின் போது, கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு அதிகபட்ச பாதுகாப்பை வழங்குமாறு தாம் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் - பொலீஸ்மா அதிபர் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (3-206)

# அரச உத்தியோகத்தர் சங்கக் கூட்டம்

கோண்டாவில், ஒக்.12

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்க யாழ். மாவட்ட நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 19, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள பணிமனையில் தலைவர் வி. நவரத்தினராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்குத் தலைமைச் செயலகத்தில் இருந்து செயலாளர் இ.மணிவண்ணன் கலந்துகொள்ளவுள்ளார். இதில் 2006 ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் முக்கிய விடயங்கள் பற்றி ஆராயவிருப்பதால் நிர்வாக சபையின் சகல உறுப்பினர்களையும் தவறாது சமூகந்தருமாறு சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் இ. சி.இராசக்கோன் கேட்டுள்ளார். (த-49)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் **Super Cub 90 (Winner)** மற்றும் நல்லின தென்னம் கன்றுகள், பள்ளக் காணிக்குள் போடும் மக்கி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 7/1, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (41271)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் 13xxxx தொடர் இலக்கமுடைய A/C பவர் பவர்மிரர், பவர் ஸ்ரோர்ல், பவர் எக்கணமி, அஜஸ்டட் சீட், புல் அபோஸ்டின் வெள்ளை நிறக் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 109, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P. 0717135135, 0714278923. (41276)

## காணி விற்பனைக்கு

கச்சேரிக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வேலன் திருமண சேவை, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41275)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, பெருமாள் கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: மோகன், தொலைபேசி இல. 0776 - 111419, 021-222 7096. (41268)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு, அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, 72 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். **Velan 1@ walla.com.** (41279)

## தவறிவிட்டது

கிருபராஜ் வலன்ரைன் சுதர்ஷன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன பேர்சுடன் 01-10-2005 அன்று யாழ் பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: அல்லாரை வடக்கு, மீசாலை **T.P.** 0776903258. (41124)

## தேவை

சண்டெல் தொலைபேசி இணைப்பு ஒன்று உடன் தேவை

தொடர்பு:

**T.P.No.** 0777917686

(41269) (21.15.45)

## வயலின் இசை வகுப்பு

விஜயதசமி நாள் வகுப்பு புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

தொடர்பு:

*48/8 சொர்ணவடலி*

*பிள்ளையார் கோயிலடி, கொக்குவில்*

*மேற்கு, கொக்குவில்.*

(41267) (21.15.45)

## ORGAN / VIOLIN NOTES

**Organ, Guitar,** புல்லாங்குழல், வயலின் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப்பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம் 1-40), கேள்விஞானம் ஆகிய நூல்கள் விற்பனைக்குண்டு.

**கரவீணா இசைமன்றம்**

**75, கோயில் வீதி, நல்லூர்.**

(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே)

(41267) **T.P.No. 0713055791** (21-45-15)

## செயலமர்வு

யாழ்ப்பாண கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரும் 'யுனிசெவ்' நிறுவனத்தினரும் இணைந்து நடத்தும் கட்டாயக் கல்வி வரவுக் குழுவினை வலுப்படுத்தும் செயலமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், கட்டாயக்கல்வி வரவுக்குழுவில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர். (த-ரி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ்.பல்கலைக்கழகத்தில் 06-10-2005 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற*

**சோதிநாதன் ஸ்ரீகிருஸ்ணா**

**(B.A.Hons Geography - Spl)**

என்பவரை மேலும் பலபட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம் தெற்கு.* (41277)(26.21.15.45)

ரதி (சித்தி)
**சகோதரங்கள்.**

## பத்திரிகை விநியோக ஊழியர்கள் தேவை

**வவுனியா, கொழும்பு ஆகிய இரு இடங்களுக்கும் பத்திரிகை விநியோக ஊழியர்கள் தேவை.**

1. வவுனியா விநியோகத்திற்கும் கொழும்பு விநியோகத்திற்கும் அந்தந்த இடத்து பாதை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. காலை உணவுடன் தங்குமிட வசதி உண்டு.
3. சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 13.10.2005 பி.ப. 2. மணிக்கு நேரில் வரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/45563)
(26-21-15-45)

**மனிதவள சேவை,**
**291/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# பட்டமளிப்பு விழா வாழ்த்து

செல்வி:
அனற்சர்மிளா எட்வின்ராஜா
(B.A)
06-10-2005
நான்காண்டுகள் பல
இன்னல்களுடன்
பல்கலையில் பயின்று
இன்று கனிதரும்
காலமதில் நிற்கும்
தாங்கள் மேலும்
பல கலைகளிலும்
பட்டங்கள் பெற்று
வாழ்வில் உயர்ந்திட
எனது வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்
யூஜின் அண்ணா.
புதுக்குடியிருப்பு.



# MCS

*324, Palaly Road, Jaffna.* (Near Alady Junction)

## G.C.E A/L - GIT

மாணவருக்கான முன்னோடிக்

## கணனி கருத்தரங்கு

காலம் : 14/10/2005 மாலை 4.00 மணி
அனுமதி : இலவசம்
இடம் : நிறுவன விரிவுரை மண்டபம்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளை முன்கூட்டியே, நேரில் மேற்கொள்ளவும்.

*****Supported by UNDP/JRRP*****

## பண்டிகைக்கால விசேட விலைக்கழிவுடன் தீபாவளி வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன

- பிரத்தியேகமாக இந்தியா, சிங்கப்பூர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கண்ணைக் கவரும் வண்ண வண்ண வாழ்த்துக்கள்.
- இலங்கையின் முன்னணி வெளியீடுகளான சீவம்ஸ், சுஜிகலா, றோயல், நியூகலா, ஞானம்ஸ் வாழ்த்துக்கள்.
- யாழ். குடா நாட்டில் ஒரே இடத்தில் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்யலாம்.

மிகக்குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்
நிகரில்லாத் தரங்கள்

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
**இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ. பே. 6693**

(சி-45568) (21.15.45)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
13 - 10 - 1937

மறைவு
12 - 09 - 2005

திருமதி

## மீனாட்சி நடேசன்

எம் குடும்ப விருட்சத்திற்கு நீராகி வேராகி நின்று நிழல் நிரப்பி
வாழ்வாங்கு நாங்கள் வாழ வழிகாட்டி வைத்து - இன்று
பாவிகளாய் எமையிங்கு பதறியழ வைத்துவிட்டு
பரமன் தாழ் அடைந்துவிட்ட எம் அன்புத் தெய்வமே
என்றும் அணையாது உம் நினைவு.

கடந்த (12.09.2005) திங்கட் கிழமை அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேஷ்டிக் கிரியைகள் பார்த்திப வருடம் 26 ஆம் நாள் இன்று (12.10.2005) புதன்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் வீதி.
வரணி வடக்கு.
வரணி (41228)

**- குடும்பத்தினர்.**

## சாரணர் கிளைச் சங்க வெள்ளிவிழா

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் வெள்ளிவிழாவும் சாரணர் பாசறை விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 4 நாள்களுக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் போட்டி நிகழ்வுகளாக குழுப்பதிவேடு, சமூகசேவை, தீப்பாசறை, மைதானக் காட்சி, நிலைக்காட்சி, அணிநடை, பாசறைப் பரிசோதனை, வேலை வாரம், சிறந்த செயற்திறன், குழுத் தெரிவு என்பன இடம் பெறும்.

இதேவேளை- எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை குருநகர் சாரணர் வெளிக்கள நாள் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. (த-202)

## சமுர்த்தித் திட்டத்தில் வீதி புனரமைப்பு

சமுர்த்தி கிராமிய நிதியத் திட்டத்தின் சமுர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மக்கள் பங்களிப்புடன் புங்குடுதீவு மடத்து வெளி கம்புலியன் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது என்று புங்குடு தீவு ஜே/ 22,23 சமுர்த்தி உத்தியோகத்தர் க. அஜந்தன் தெரிவித்துள்ளார். (த-ரி-204)

# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் மனோகரன்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் மனோகரன் அவர்கள் 06.10.2005 அன்று ஜேர்மனியில் காலமானார்.


அன்னார் இராசேந்திரம் - காலஞ்சென்ற அருமை முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - துரையம்மா தம்பதியரின் மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், கௌதமி, துஷாந்தியின் தந்தையும், நிர்மலா தேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாஸ்கரன், சுசீலாதேவி (வவுனியா), ரவீந்திரன் (கனடா), சசிகலா (சுவிஸ்), நிரஞ்சினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்லப்பா, சுபத்திராதேவி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, கயிலாயநாதன் (பிறிஸ்ரோ கடைச்சல் பட்டறை), சுசீலகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை 13.10.205 ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 10, சபாபதி வீதி,
பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். (41272) (21.15.45)

தகவல்
**ஐ. கயிலாயநாதன்**
(மைத்துனர். )




ஸ்ரீநகரில் பாதிக்கப்பட்ட வீதிகளை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புக் குழுவினர்

## உயிரிழப்பு: 40 ஆயிரம் காயம்: 42 ஆயிரம்

இஸ்லாமாபாத்,ஒக்.12

பாகிஸ்தானில் ஏற்பட்ட கொடூரமான பூகம்பத்தில் இறந்தவர் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டி உள்ளதாக பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் தெரிவித்தார். மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. 42 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். அடுத்தடுத்து 140 முறை லேசான நிலநடுக்கம் உணரப்பட்டது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், சீனா,கனடா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்தும் மீட்புக்குழுவினர் பாகிஸ்தானுக்கு விரைந்துள்ளனர். பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஹெலிகொப்டர் தேவை உள்ளதாக உலக நாடுகளிடம் உதவி கேட்டுள்ளார். அடுத்தடுத்து லேசான நிலநடுக்கம் உணரப்பட்டதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். (ஐ)



உணவுக்காகக் கையேந்தி நிற்கும் பாகிஸ்தானிய மக்கள்

## இறந்த குழந்தைகளின் உடல்களை வாங்க பெற்றோர் இல்லாத பரிதாபம்

இஸ்லாமாபாத்,ஒக்.12

பாகிஸ்தானில் சனிக்கிழமை பூகம்பம் தாக்கி 48 மணி நேரத்துக்குப் பின், இடிபாடுகளில் இருந்து 6 வயதுச் சிறுவன் திங்கட்கிழமை உயிருடன் மீட்கப்பட்டான்.

வேறு பல இடங்களில் கட்டட இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட குழந்தைகளின் உடல்களை வாங்கக்கூட பெற்றோரோ, உறவினர்களோ இல்லை. பூகம்பத்தில் அவர்களும் புதையுண்டு, மாண்டுவிட்டனர். எங்கு திரும்பினாலும் கண்களைக் குளமாக்கும் சோகக் காட்சிகளாகவே உள்ளன.

சனிக்கிழமை ஏற்பட்ட நாசகாரப் பூகம்பத்தால் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்ப் பகுதியில் ஒரு தலைமுறையே முற்றாக அழிந்துவிட்டது என்று வேதனையுடன் குறிப்பிட்டார் பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான்.

பூகம்பத்தால் ராவலாகோட் சின்னாபின்னமாகிவிட்டது. முஸாபராபாத் நகரம் முக்கால்வாசி நாசமாகிவிட்டது. இழப்பைச் சந்திக்காத ஒரு குடும்பம் கூட அங்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள பலகோட் நகரில் உள்ள ஷாஹீன் பள்ளிக்கூடம் சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தால் நொறுங்கிவிட்டது. தகவல் அறிந்ததும் தம் குழந்தைகளை மீட்க பெற்றோர் களும் உறவினர்களும் அங்கு குவிந்துவிட்டனர். பள்ளிக் கட்டடத்தின் இடிபாடுகளில் 400 இற்கு மேற்பட்ட மாணவர்கள் சிக்கிக்கொண்டு இருக்கின்றனர் என்று அவர்கள் கூறினர். (ஐ)

உலக அரங்கில்

## ஈராக் சந்தையில் கார்க் குண்டு!

### 30 பேர் பலி; 35 பேர் காயம்!

தலபார், ஒக்.12

ஈராக்கின் வடமேற்குப் பகுதியில் பொதுமக்கள் நிறைந்திருந்த சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 30 இற்கும் அதிகமானனோர் உயிரிழந்தனர். சுமார் 35 பேர் வரை கடும் காயங்களுக்குள்ளாகினர்.

சிரிய எல்லையில் இருந்து 150 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தலபார் நகரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

வெளிநாட்டு ஆதரவு கூலிப் படைகள் பலமாக நிலைகொண்டு செயற்படும் பகுதி அது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

தலைநகர் பக்தாத்தின் மேற்குப் புறத்தில் இராணுவ சோதனைச் சாவடி ஒன்றின் அருகே நடத்தப்பட்ட மற்றொரு தற்கொலைத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஐ)

## கிழக்கு அமெரிக்காவில் வெள்ளம்

கீனி அமெரிக்கா,ஒக்.12

அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் தொடங்கி, நியூஹாம்ப்ஷயர் வரை பல பகுதிகளில் பெய்த பலத்த மழையால் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அதனால் வீடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

சனிக்கிழமை பெய்த கடும் மழையால் பல முக்கிய சாலைகளில் 3 அடியிலிருந்து 6 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்ந்தோடுகிறது.

நியூஹாம்ப்ஷயரிலும் வடக்கு கரோலினாவிலும் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர். பல வீதிகளையும் பாலங்களையும் வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. அதனால் ஆங்காங்கே தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே, கிழக்கு அத்திலாந்திக் கடலில் புதிய சூறாவளி உருவாகி இருப்பதாக மியாமியில் உள்ள வானிலை ஆய்வு நிலைய நிபுணர்கள் தெரிவித்தனர். அதற்கு, 'வின்ஸ்' சூறாவளி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது அண்மையில் உருவாகியிருக்கும் 11ஆவது சூறாவளியாகும். அது மிகத் தொலைவில் இருப்பதால், அமெரிக்காவுக்கு அதனால் பாதிப்பு இல்லை. அது ஸ்பெய்ன் நாட்டை நோக்கிச் செல்கிறது. (ஐ)


Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6316834 முதல் 6329346 வரை சீட்டிழுப்பு இல. 175 திகதி 10-10-2005

வெற்றி எண்கள் 1 0 2 4 8 7 சுப்பர் எண் 03

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,02,86,250/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 1,02,86,250/- | 1,02,86,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 5,000/- | 5,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,077 | 500/- | 5,38,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,757 | 50/- | 5,37,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,06,601 | 10/- | 10,66,010/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,073 | 100/- | 1,07,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,655 | 20/- | 2,13,100/- |
| | | மொத்தம் | 1,40,07,010/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,46,09,610/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 10,000,000/-

தொடர் இல. 7254149 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 13 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 6317841-1-39 |
| நுவரெலியா | 6317210-2-62 |
| அம்பாறை | 6321989-1-19 |
| கொழும்பு | 6327012-9-02 |
| இரத்தினபுரி | 6322810-7-66 |
| அனுராதபுரம் | 6323161-9-37 |
| கண்டி | 6317329-8-96 |
| மொனராகலை | 6326881-9-76 |


## இஸ்ரேல்,அமெரிக்க அறிஞர்களுக்கு பொருளாதார நோபல் பரிசு கூட்டாக

ஸ்டொக்ஹோம்,ஒக்.12

இந்த ஆண்டின் பொருளாதார அறிவியலுக்கான நோபால் பரிசு இஸ்ரேல் அறிஞர் ரோபர்ட் ஜே.ஆமனுக்கும் (75) அமெரிக்க அறிஞர் தோமஸ் சி.ஷெல்லிங்குக்கும் (84) கூட்டாக வழங்கப்படுகிறது.

ஆட்டக் கோட்பாடு(கேம் தியரி) பகுப்பாய்வு மூலம் பொருளாதார அறிவியலில் அவர்கள் கண்டறிந்துள்ள பணிக்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

ஜேர்மனியில் பிறந்தவர் ஆமன். பின்னர் இஸ்ரேலுக்குச் சென்று ஜெருசலேம் நகரிலுள்ள ஹீப்ரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியரானார். இவர் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் குடியுரிமைபெற்றவர். மேரிலாந்து பல்கலைக்கழக பேராசிரியராகப் பணியாற்றுபவர் ஷெல்லிங். (ஐ)

## தேம்ஸ் நதிக்கரையில் விநாயகர் சிலை கரைப்பு

பிரிட்டனில் விநாயகர் சதுர்த்தி திரு விழாவின் நிறைவைக் குறிக்கும் வகையில் கடந்த ஞாயிறன்று லண்டன் தேம்ஸ் நதிக்கரையில் விநாயகர் சிலை கரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 'பிளாஸ் டர் ஒவ் பரீஸால்' செய்யப்பட்ட இந்தச் சிலை லண்டனில் வசிக்கும் இந்திய வழக்கறிஞர் பாஸ்கர் கொர்படேவால் புனே நகரிலிருந்து அங்கு வரவழைக்கப் பட்டது.

இந்தியாவில் நடப்பதைப் போல் ஊர்வலமாகக் கொண்டுவரப் பட்டு சிலை கரைக்கப் பட்டது. தேம்ஸ் நதியில் விநாயகர் நிலை கரைக்கப்படுவது இதுவே முதல் முறை. (ஐ)




# சமுர்த்தி நிவாரண முறையீடுகளுக்கு குழுக்கள் அமைப்பு

வலி.மேற்கு, ஒக்.12

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி மேன் முறையீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி நிவாரண முத்திரிரைகள் கிடைக்காத குடும்பங்கள், தகுதியான குடும்பங்கள் மேன்முறையீட்டினைக் கிராம அலுவலர் களிடம் சமர்ப்பிக்கலாம். சமுர்த்தி மேன் முறையீட்டுக்குழுக்கள் சகல கிராம அலுவ லர் பிரிவுகளிலும் செயற்படுகின்றன. கிராம அலுவலர்களே மேன்முறையீட்டுக் குழுக்களின் செயலாளர் களாகக் கடமையாற்றுகின்றனர். (த-175)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் முன்னாள்
விரிவுரையாளரான
டாக்டர் பொன். இராமநாதன்
அவர்கள் சித்த மருத்துவத் துறையில் முதல் முதலாக கலாநிதிப் பட்டம் பெற்றமையை எமது கல்லூரிச் சமுகம் மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றது.

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(41274)(26-19-34)


# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட உதவியுடன் உரக் களஞ்சியங்கள் புனரமைப்பு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் (UNDP) ஐரோப் பிய ஒன்றியத்தின் (Europian Union) நிதியுதவியுடன் போரி னால் சேதமடைந்த உரக்களஞ்சியங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 12,43,200 ரூபா ஒதுக்கப்பட்டு அளவெட்டி, அராலி, நாவற்குழி மற்றும் மட்டுவில்-சந்திரபுரம் ஆகிய இடங்களில் உள்ள கிராமிய உரக் களங்சியங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் உரக் களஞ்சி யங்கள் யாழ். மாவட்ட விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு தேவை யான உரவகைகள் மற்றும் பீடைநாசினிகளைத் தேவைப் படும் நேரத்தில் போதுமான அளவை. நியாய விலையில் வழங்கு வதற்காக அவற்றை களஞ்சியப் படுத்திய வைப் பதற் கும் பயன்படும். அத் துடன்அப் பகுதி விவ சாய அமைப்பு களின் அலுவலக மாகவும் விவசாய போதனா சிரியர் மற்றும் கால் நடை வைத்தியர் களின் வெளிக்கள சேவைகள் வழங் கும் நிலையங்க ளாக வும் அவை செயற் படுத்தப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# சுற்றாடல் பயிற்சிநெறி

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். உபபிராந்திய அலுவலகத்தின் ஏற் பாட்டில் சுற்றாடல் முன்னோடிப் படையணி களுக்குப் பொறுப்பான ஆசிரியர் களுக்குப் பயிற்சிநெறி ஒன்று நடத்தப் படவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.செயலககேட்போர் கூடத்தில் இப்பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

உபபிராந்திய அலுவலக உதவிப் பணிப் பாளர் விஜிதா சத்தியகுமாரின் தலைமை யில் நடைபெறவுள்ள இப்பயிற்சியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் 100 ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர்.


# Oxfam

Oxfam GB is a development, relief and campaigning organization dedicated to finding lasting solutions to poverty and suffering around the World.

Oxfam GB is extending invitation to private business in Srilanka to submit tenders for the supply of the under mentioned items.

| Tender No. | Description |
|---|---|
| PRF No 001 GB-North | Fishing Nets and Boats |
| PRF No 002 GB-North | Out Board Motors |
| PRF No 003 GB-North | Machinery for Ice Factory |

Tender documents will be available from the address below from 9 am on 12th Oct. (Wednesday), and must be returned to the same address before 5 p.m. on 19th October 2005 (Wednesday)

**Oxfam GB**
**8,Kinross Avenue,**
**Colombo - 04,**
**Srilanka.**

**Oxfam GB**
**33, Kanagapuram,**
**Kilinnochchi,**
**Srilanka.**

**Further details may be obtained from the logistics department**

**In Colombo**
**Telephone No.: 2597522, 2597567**
**Fax: 2585270**

**In Kilinochchi**
**Telephone No.: 021 228 5794, 021 228 5111**
**Fax: 021 2285794**

**Logistis Department,**
**Oxfam GB**
**Kinross Avenue,**
**Colombo - 04.**

**Logistis Department,**
**Oxfam GB,**
**33, Kanagapuram,**
**Kilinochchi.**

(C/445569) (24)











**ACTION CONTRE LA FAIM**

## ADVANCED FIELD OFFICER For FOOD SECURITY DEVELOPMENT PROGRAMMES (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years, **we require in Jaffna services of a woman as advanced field officer (AFO).**

This position is suitable for an economist or an agriculturalist, who has **strong experience** of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes, mainly in the Islands, with a targeted **gender approach** (initiatives with women's group, widows...). She will manage the collection and analysis of livelihood data, the reporting and occasionally the representation at technical meetings in Jaffna. She will join a team of 2 AFOs (Junior and senior) and will work under the responsibility of the Food Security Programme Manager in Jaffna.

Applicants must be charismatic, good in team management, fluent in English and able to do conversation in Tamil. Computer literacy, especially MS Word and Excel is required.

Category: Senior position
Duration: 1 year with insurance coverage.

Apply with in as soon as possible:
**ACF Food Security Job Vacancy**
**No.40, Racca Lane,**
**Chundikuli.**
**Jaffna.** Tel.: 021-222-2465/021 - 222 6993.

(C/45543)

# ...0 நாள்களுக்குள் கட்டணம் செலுத்தப்படாவிடின் ...ந்தவித அறிவித்தலுமின்றி மின்சாரம் துண்டிப்பு

## இலங்கை மின்சார சபை திட்டவட்டமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

...பட்டியல் வழங்கப்பட்ட தினத்திலி... நாள்களுக்குள் அதில் குறிப்பிடப்... ள கட்டணம் செலுத்தப்படவேண்... ...வ்வாறு கட்டணம் செலுத்தப்படா விடின் எந்தவித அறிவித்தலுமின்றி மின்விநியோகம் துண்டிக்கப்படும்.

- இவ்வாறு இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை மின்சார சபையால் மின்பாவனையாளர்களுக்கு மாதாமாதம் வழங்கப்படும் மின்பட்டியலில் சிவப்பு நிறத்தில் குறிப்பிட்டிருப்பது போன்று மின்பட்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் மின்பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகை செலுத்தப்படவேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் வேறு எந்தவொரு அறிவித்தலுமின்றி மின்விநியோகம் துண்டிக்கப்படும்.

மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்டால் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின் பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகையுடன் தொள்ளாயிரத்து இருபது ரூபாவை மேலதிகமாக - மீளிணைப்பு வழங்குவதற்கான கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

இம்மாதம் முதல் மின்பட்டியல் நிலுவையுள்ளவர்களின் மின்னிணைப்பைத் துண்டிப்பது அமுலில் இருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துக் கொள்கின்றது.


இதேவேளை - மின்பாவனையாளர்களுக்கு வசதியாக - பணம் செலுத்தப்பட்ட அன்றே அவர்களின் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு வசதியாக "இல,500, கே.கே.எஸ். வீதியிலுள்ள மின்சாரசபை அலுவலகத்தில் காசோலை மூலம் மின்பட்டியல் பணத்தைச் செலுத்த இலங்கை மின்சார சபை ஒழுங்கு செய்துள்ளது - என்று கூறப்பட்டது. (எ-202)

## கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் பணிகள் நிறுத்தம்

முற்றவெளிப் பகுதியில் அமைந்திருக்கும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் சகல வியாபார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று தற்போது கட்டட முன்தளப் பகுதிகளுக்கு சிமெந்தில் தளங்கள் போடப்படுவதால் அதற்கு வசதியாக சகல வியாபார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டட நிர்மாணப் பணிகள் முழுமையாக முடிவுற்று புதிய பம்பிகள் பொருந்திய பின்னர் பெரும்பாலும் அடுத்த மாத முதல் வாரத்தில் எரிபொருள் விற்பனை நிலையம் மக்கள் பாவனைக்கு மீண்டும் திறக்கப்படும்என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)





யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நேற்றுக் காலை வெகுசிறப்பாக இடம்பெற்றது. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சுவாமி தேரில் பக்தர்கள் புடைசூழ உலாவரும் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்:பகீரதன்)

# வடமராட்சியில் 'வன்னியன்படை' எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரம்

"வடமராட்சிப் பகுதியில் சமுதாயச் சீரழிவு நடவடிக்கைகளை அரங்கேற்றும் துரோகிகளுக்கு " வன்னியன் படை" கடும் நடவடிக்கை எடுக்கும்'' என்று எச்சரிக்கை விடுத்து வடமராட்சிப் பகுதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அந்த சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

எமது மக்களின் விடுதலைக்காக
எச்சரிக்கை !!!

இந்த நாட்டின் விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் வீரர்களையும் அப்பாவி பொது மக்களையும் இழந்து போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளை அந்நிய சக்திகளுக்கும் தேச விரோத கும்பல்களுக்கும் விலை போய் எமது நாட்டின் இறைமையை களங்கப்படுத்துகிறீர்கள்! இதைச் செய்பவர்கள் எவராயினும் எமது பாரிய தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள். இத்தோடு சமூக சீரழிவான நடவடிக்கைகளிலும் வயது வேறுபாடின்றி நடந்து கொள்கிறீர்கள்! இதனை ஒரு போதும் எமது அமைப்பு மன்னிக்காது என்பதை நினைவில் கொண்டு இந்த நாட்டின் நல்லொழுக்கம் உள்ளவராக வாழவேண்டுகிறோம்.

இதை ஏளனம், விமர்சனம் செய்பவர்கள் மிகவும் கவனமாக இருக்கவும். இராணுவம், பொலீஸ், தேசவிரோதிகளுடன் பழகுதல், பாலியல் சேஷ்டைகள் செய்வோர், தேவையற்ற விதங்களில் தெருவோரங்களில் நிற்போர், அநாவசியமற்ற கதைகள் கதைப்போரும் எமது தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள் - என்று அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (த-173)

# யாழ்.பிரதேச செயலக கலாசார விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் கலாசார விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், ஆழிப்பேரலை செயலக மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூ.சொலமன் சிறில் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் -

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் பொ.சண்முகசுந்தரம், வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் - கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் நடனம், நாட்டுக்கூத்து, இசைநிகழ்ச்சி, 'அழுகுரல்கள் தொடருமா' என்னும் சமூக நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலாசார போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (த-13-30)

# பண்ணை மீன்சந்தை அருகே சேமக்காலையில் துர்நாற்றம்

அரியாலை,ஒக்.12

யாழ்.பண்ணை மீன்சந்தைக்கு அருகில் உள்ள சேமக்காலையில் பிரேதக் கழிவுகள் மற்றும் மனித எச்சங்களை உரிய முறையில் புதைக்காததால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது குறித்து யாழ்.மாநகர ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து கொண்டுவரப்படும் பிரேதக் கழிவுகள் மற்றும் அரச செலவில் அடக்கம் செய்யும் சடலங்கள் இந்த சேமக்காலையில் உரிய முறையில் புதைக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. புதைக்கப்படும் எச்சங்களை நாய்கள் கிளறி விடுவதால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலையும் தோன்றியுள்ளது.

இதனால், பண்ணை மீன்சந்தைக்கு வரும் நுகர்வோரும் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.(ஐ-17)



2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றத் தொண்டர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர். அப்போது எடுக்கப்பட்ட படம். (படம் பா.நந்தகுமார்).

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சண்டிலிப்பாய் பிரிவில் கிராம எழுச்சித் திட்டம்

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலர் பிரிவில் சமுர்த்தி கிராம எழுச்சித் திட்டத்தில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

வீதிகள் புனரமைப்பு, கிணறுகள் திருத்தம் ஆகிய வேலைகள் இந்த மாதத்திற்குள் செய்து முடிக்கப்படவுள்ளன.

நான்கு பொதுக்கிணறுகள் திருத்தம் செய்தல், ஏழு கிணறுகள் துப்புரவு செய்தல், நான்கு விவசாய வீதிகள் புனரமைப்புச் செய்தல்ஆகிய திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன. (த-152)

## வறிய மாணவர்களுக்கு கல்வி உதவுதொகை

கைதடி,ஒக்.12

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தினால் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களுக்கான உதவுதொகை வழங்கும் வைபவம் அண்மையில் கைதடி செல்வா சன சமூக நிலைய மண்டபத்தில் மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையிலே நடைபெற்றது. இந்த நிகழ்வில் பதினைந்திற்கும் மேற்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவுதொகை வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக சேவையாளர்களும் கலந்துகொண்டு உதவுதொகையை மாணவர்களுக்கு வழங்கினார்கள். (த-75)

### மஹிந்தவுக்கு ஆதரவாக ஈ.பி.டி.பி. அமைப்பினர்

# பொலீஸ் பாதுகாப்புடன் ஒட்டிய நோட்டீஸ்கள் ராணுவப் பாதுகாப்புடன் அகற்றப்படுகின்றன!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் யாழ்.நகரப்பகுதிகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அகற்றப்பட்டுவருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் படம் பொறித்த இந்த வர்ணச் சுவரொட்டிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒருநாள் இரவோடு இரவாக நகர்ப்பகுதி சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன.

பொலீஸார் பாதுகாப்பு வழங்க ஈ.பி. டி.பி. உறுப்பினர்கள் இந்தப் பிரசுரங்களை ஒட்டினர் என்று கூறப்பட்டது.

அவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை இப்போது பொலீஸார் அகற்றி வருகின்றனர். தேர்தல் சட்டத்துக்கு அமைய சுவரொட்டிகளை அகற்றும் இந்தப்பணி இராணுவத்தினரின் பாதுகாப்புடன் இடம்பெற்று வருகிறது. (ஐ-17)

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
...சிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரூ300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு சுயாதீனமான கல்விக் கொள்கை அவசியமா?
வாசியுங்கள் அகவிழி

## NORTH LANKA
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

O/L தகமையுடன் 2 வருடங்களில்

**Trinity University** USA

இனது பட்டதாரியாகுங்கள்.

**B.Sc.** (Computer Science)

**B.Sc.** (Mechanical Engineering)

விஜய தசமி இன்று(12-10-05)2ஆவது பிரிவு ஆரம்பம்
பிரதான வீதி சங்கானை ☎ 0214591647



**G.C.E A/L** பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் புக முடியாதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**City & Guilds International London (U.K)**
நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering

ஆகிய துறையில் பொறியியல் வகுப்புகள் கொழும்பில் உள்ள APPS International Net Work (PVT) LTD ஆல் நடாத்தப்படுகின்றது.

**புதிய பிரிவுகள் ஆரம்பம. 16.10.2005**

Note:-Advance Diploma தராதரத்துடன் Charted Engineer, Graduate Diploma நேரடியாகப் பயிலலாம்.அதோடு London பல்கலைக்கழகங்களில் 2ம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
Regd No 15251 ,T.P:- 021-222 3335


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பாலசுப்பிரமணியம்**
**கிருபாகிருஷ்ணன்**
B.A.(Hons) (Special Digree in Sociology)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் சமூகவியல் சிறப்புக் கலைமாணிப்பட்டம் பெற்ற **கிருபாகிருஷ்ணன்** அவர்களை பல்கலையும் கற்று மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

த.கோபாலச்சந்திரன்
குடும்பத்தினர்.
இணுவில் மேற்கு. (41255)(26-21-19-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தையொட்டி, எமது பாடசாலையின் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியரான
**திரு.சி.கணேசகுமார்** அவர்கள்
வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் சிறந்த ஆசிரியராகக் கௌரவிக்கப்பட்டமையையிட்டும்
எமது பாடசாலையின் சிரேஷ்ட தமிழாசிரியை
திருமதி **ஜெயந்தினி தவசீலன்** அவர்கள்
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் திறமைச் சித்தி (Merit Pass) பெற்றதையிட்டும் பெருமைப் படுகின்றோம். இவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்று வளமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை**
**மயிலிட்டி.**
(சி-45547)
(21.19-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில்
பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான



திருமதி
**ஈ.வா.ஞானப் பொன்ராஜா**
கலைமாணி (Eng.)



செல்வி
**கிருஸ்ணவதனி சுப்பிரமணியம்**
சிறப்புக்கலைமாணி

**ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்,
**யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.**
(41252)(21.34.19)

### தேவாரப் பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அகில இலங்கை திருமுறை மன்றம் கொழும்புத்துறை மேற்கில் நடத்தி வரும் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்பின் விஜயதசமி நாள் வகுப்பு இன்று புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தேவார இசைமணி கலா பூஷணம் கே.எஸ். ஆர் திருஞானசம்பந்தன் வகுப்புகளை நடத்துவார்.

இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று வருகின்றன. (3-204)

### நாவலர்தினம்

வலி.தெற்கு, ஒக்.12

கைதடி, இணுங்கித்தோட்டம் கந்தசாமி கோயில் பரிபாலனசபையினரும் கைதடி சைவ ஐக்கிய சங்கத்தினரும் இணைந்து இம்மாதம் 24ஆம் திகதி நாவலர் விழாவினை நடத்த உள்ளனர்.

மேற்படி கோயில் மண்டபத்தில் அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கிராமசேவை அலுவலர் க. செல்வராசா தலைமையில் விழா நடை பெறும்.

விழா மண்டபத்துக்கு நாவலர் பெருமானின் உருவப் படம் எடுத்து வரப்பட்டு விழா கொண்டாடப்படுவதுடன், நாவலர் விழா தொடர்பாக இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (த-152)

### பாலர் பராமரிப்பு நிலையத்திற்குக் கட்டடம்

தென்மராட்சி, ஒக்.12

மந்துவில் பாலர்பகல் பராமரிப்பு நிலையத்திற்கு 60 அடி நீளக் கட்டடமும் கிணறு, மலகூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜீ.ரீ. சற்) இக்கட்டடங்களை அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-117)

# அரசாங்க கேள்வி அறிவித்த

## சுகாதார சேவைகள் பிரிவு
## யாழ்ப்பாணம்

### பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் - 2

2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவி... வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த/உலர்உணவு ... வதற்கான கேள்விகள் 11-11-2005ஆம் திகதி வெள்ளிக்கிழமை ... பகல் 10மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் **(worth report)** எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் **(Bid Bond)** சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக்கட்டுப் பணமும் செலுத்தி 10-11-2005ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 15 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

*விவரங்கள் வருமாறு:-*

அ) உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப்பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச்சான்றிதழ் |
|---|---|---|---|
| ஆ.வை.பருத்தித்துறை | 3000/- | 112000/- | 30000/- |
| மா.வை.வல்வெட்டித்துறை | 2000/- | 78000/- | 20000/- |
| மா.வை.தெல்லிப்பழை | 2000/- | 97500/- | 20000/- |
| மா.வை.நெடுந்தீவு | 2000/- | 22000/- | 20000/- |
| மா.வை.ஊர்காவற்றுறை | 2000/- | 30000/- | 20000/- |
| மா.வை.சாவகச்சேரி | 2000/- | 43500/- | 20000/- |
| சு.கூறு கோப்பாய் | 1500/- | 47000/- | 15000/- |
| சு.கூறு சங்கானை | 1500/- | 31000/- | 15000/- |

ஆ) சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப்பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச்சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு அச்சுவேலி | 1500/- | 32500/- | 15000/- |
| சு.கூறு அனலைதீவு | 1500/- | 11000/- | 15000/- |
| சு.கூறு காரைநகர் | 1500/- | 19000/- | 15000/- |
| சு.கூறு நயினாதீவு | 1500/- | 14000/- | 15000/- |
| கி.வை வேலணை | 1500/- | 16000/- | 15000/- |
| கி.வை. வட்டுக்கோட்டை | 1500/- | 11500/- | 15000/- |
| கி.வை. மருதங்கேணி | 1500/- | 26000/- | 15000/- |
| ம.ம.ம.ம. கரவெட்டி | 1000/- | 8500/- | 15000/- |
| ம.ம.ம.ம. வரணி | 1000/- | 10000/- | 15000/- |
| ம.ம.ம.ம. மானிப்பாய் | 1000/- | 6000/- | 15000/- |
| கி.வை.பண்டத்தரிப்பு | 1500/- | 16000/- | 15000/- |
| ம.ம.ம.ம. கோண்டாவில் | 1000/- | 7000/- | 15000/- |
| ம.ம.ம.ம. கொடிகாமம் | 1000/- | 10500/- | 15000/- |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

**மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் ,**
**யாழ்ப்பாணம்.**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-45553)(21.19.34)





**SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியூடான**
**பயிற்சியும் பணி நியமனமும்**
**( எட்டாவது பிரிவு )**






**பணிநியமனம்:** ஆங்கில ஆசிரியர், உள்நாட்டு, சர்வதேச செயற்பாடுகளில் இணைய தள, மென்பொருள், கற்கைநெறி விருத்தியாக்கம் மற்றும் பொது நிர்வாகம்.

**பயிற்சிக்காலம் :** திங்கள் முதல் வெள்ளி 3 மாதங்கள், 9.00 - 1.00 மற்றும் 1.00 - 4.45
**கட்டணம் :** ரூபா 12000/-
**கல்வித்தகுதி :** க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பயிற்சிக் காலத்தின்போதும் ஊதியம் வழங்கப்படும்**

**அனுமதிக்கு 12.10.2005 மற்றும் 13.10.2005 திகதிகளில் (நாளையும் மறுதினமும்)**
**நேரில் முதலில் வரும் 40 பேர் மட்டும் தெரிவுசெய்ய...**

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. 233/4, Kasthuriyar Road, Jaffna 021 - 45... 268968

# பாராட்டி வாழ்த்துகிறோம்



06.10.2005 இல் சிறந்த ஆசிரியை என்ற விருதினைப் பெற்ற
இராமநாதன் கல்லூரி ஆசிரியை

**திருமதி நந்தினி சிவராசன்**

பல்கலையுந்தேர்ந்து கல்வி அமைச்சும் வடக்கு - கிழக்குத் திணைக்களமும் இணைந்து சிறந்த ஆசிரியை எனத் தந்த விருதினைப் பெற்ற வெல்லு தமிழ்த்தின நாட்டிய நாடகப் போட்டியில் தேசிய விருதினைப் பலமுறை பெற்றுத்தந்து கல்லூரிக்குப் பெருமைசேர்ந்த நல்லதிருமடந்தை நடன ஆசிரியை **நந்தினி சிவராசன்** மேலும் பட்டங்கள் பலவும் பெற்று, நற்சுகப் பேறும் பெற்று, கல்வி, கலை ஞானம் மிக்கு, கல்லூரிப் பணிசிறந்து குடும்ப நலஞ்சிறந்து பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம் வாழி!

(41270)(11-16-30)

**பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/இராமநாதன் கல்லூரி.**

# பாராட்டி வாழ்த்து



உலக ஆசிரியர் தினத்தை யொட்டி
யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய
ஆசிரியை

**திருமதி தயாபரி சூரியகுமாரன்**

அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சிறந்த ஆசிரியையாகக் கௌரவிக்கப்பட்டு விருதைப் பெற்றுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

(40281)(11-16)

**அம்மா, அப்பா,**
**சகோதரன், சகோதரிகள்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணோடு
18 ★ 09 ★ 1962



விண்ணோடு
12 ★ 10 ★ 2003

## அமரர் அப்புக்குட்டி உதயசீலன்
(அப்பன்)

*ஆண்டுகள் இரண்டு சென்றதையா - உம்*
*நினைவுகள் எம்மை வாட்டுதையா!*
*உறவுகள் கலந்து இருக்கையிலே*
*உம்மை எம் மனம் தேடுதையா!!*
*தேற்றுவோம் எம்முள்ளம் என்றென்றும்*
*எம்முடன் இருப்பீரென்று*
*ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவோடு*
*நாமிருப்போம்!!!*
*ஓம் சாந்தி !சாந்தி !! சாந்தி!!!*

கணேஸ்வரம்,
அளவெட்டி. (41296) (30)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.





முதன் முறையாக

தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

ஏக முகவர்கள்
செயின்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


# மரண அறிவித்தல்

## மருதப்பு தங்கம்மா



2ஆம் வட்டாரம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு தங்கம்மா அவர்கள் நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41303) (16-11-30)

*தகவல்:*
*சடையர் மருதப்பு (கணவர்).*

# ஹிஸ்புல்லா, ஹரீஸ், அஸீஸ் இன்று மீள முஸ்லிம் காங்கிரஸில் இணைவு!

கல்முனை, ஒக்.12

முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, முன்னாள் எம்.பிக்களான எச்.எம்.எம். ஹரீஸ், எம்.பி.ஏ. அஸீஸ் ஆகியோர் இன்று புதன்கிழமை மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்துகொள்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் இன்று கட்சியில் உத்தியோகபூர்வமாக இணைந்துகொள்ளும் இவர்கள் பின்னர் கூட்டாகச் செய்தியாளர் மாநாடொன்றையும் நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதியமைச்சரான ஹிஸ்புல்லா, அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான 'நுஆ' கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவராகவும், இலங்கை விமானசேவைகள் நிறுவனத் தலைவராகவும் பதவிவகித்துவந்தார். எனினும், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காக அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு நகலில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து அவர் அப்பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், அஸீஸ் ஆகியோர் கடந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தலைவர் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டுக்கொண்டு அமைச்சர் அதாவுல்லாவுடன் சேர்ந்து தேசிய முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டனர். ஹரீஸ் தேசிய முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமாகவும், அஸீஸ் சிரேஷ்ட பிரதித் தலைவராகவும் பதவிவகித்து வருகின்றனர். அதாவுல்லா - ஹரீஸ் மோதலைத் தொடர்ந்து தேசிய காங்கிரஸ் எனும் புதிய கட்சியை அதாவுல்லா அணியினர் ஆரம்பித்துள்ளனர். ஹரீஸ் அணியினர் தமது தாய்வீட்டுக்கு மீண்டும் திரும்புகின்றனர். (க-3)


## வேலையாள் தேவை (பெண்)

எமது நிறுவனத்தில் சனி, ஞாயிறு நாள்களில் மட்டும் பணிபுரிவதற்குப் பெண் பிள்ளைகள் தேவை.

13.10.2005 வியாழன் 11 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

**பொருளியற் கல்லூரி**
**நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

(41308) (30)

*விஜயதசமி நன்நாளில் உங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளுங்கள்.*

**BARATHY**
சித்தன்கேணி

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு

இன்று ஆரம்பம்: 12.10.2005 புதன் 4 மணி
ஆசிரியர் - திரு. கலாமோகன் (Dip.in TEACH)

**அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவும்**

குறிப்பு: ✱ எமது நிறுவனத்தில் ஒவ்வொருவருடமும் கற்கின்ற மாணவர்கள் பெற்ற அதிஉயர் பெறுபேறுகளே எமது ஆசிரியரின் திறமையை மேலும் உறுதி செய்கின்றன.

✱ ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் பரீட்சை நடைபெறுவதால் காலம் தாழ்த்தாது உங்கள் பிள்ளைகளை உடன் இணைத்துக்கொள்ளவும்.

✱ மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும்.
✱ விசேட கற்கை புத்தகங்கள், குறிப்பேடுகள், பயிற்சிப் புத்த கங்கள் வழங்கப்படும். (41308) (30)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

*இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு*
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சிவ்ஸ்)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்
*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*
*சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த*
**கஜினி**
இன்று மட்டும் பு.நே. 6.30, 9.30.
*(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)*

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30. (பு.நே.)
(சி-44110)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை கந்தசாமி



வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கந்தசாமி (ஓய்வுபெற்ற அரசாங்க ஒப்பந்தகாரர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) அவர்கள் நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அமரர் கண்மணியின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கத்தின் (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி) பாசமிகு தந்தையும், முத்துச்சாமி, இரத்தினசாமி (அமரர்), துரைச்சாமி, சிவபாக்கியம் (டென்மார்க்), அண்ணாச்சாமி, அருந்ததியம்மா (அமரர்), சுபத்திரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணி (அமரர்), புவனேஸ்வரி, செல்லம்மா, கிருஷ்ணபிள்ளை (அமரர்), கந்தசாமி, குமாரசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), கனகமணி, பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), தவமணி, பூபதிப்பிள்ளை, சிவநேசம், சுந்தரமூர்த்தி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமாரியின் அன்பு மாமனாரும், பிரபாஜினி, சஞ்ஜீவன், நிஷாந்தினி, ராம்பிரசாத், ரஜீபன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), முத்தையா, அமரர்களான மகாலிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (12.10.2005) காலை 8 மணியளவில் மட்டுவிலில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கமலாசனி பாடசாலை முன்பாக,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (41287) (30-11-16)

தகவல்:
தர்மகுலசிங்கம் (மகன்).

## நன்னித்தம்பி இராமநாதன்



*(இளைப்பாறிய ஆசிரியர்-கோண்டாவில், சைவத் தமிழ்கலவன் பாடசாலை)*

இணுவில் மேற்கைப் பிறபிடமாகவும் கனடா (ரொரன்டோவை) வசிப்பிடமாகவும் கொண்டவரான நன்னித்தம்பி இராமநாதன் நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நன்னித்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகபூரணம் மற்றும் கண்மணிநாயகம் ஆகியோரின் அன்புக் கணவரும் விக்னேஸ்வரன், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா மற்றும் சுமதி (கனடா), நிர்மலா (கனடா), முருகானந்தன் (கனடா), குகானந்தன் (கனடா), பரங்குன்றன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, நாகநாதன், ஜெயனந்தன், உமாநிதி, தர்சா, வர்மிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிசா, அனுஜிந், நிஜானி, தனோயன், அதுசன், அதுசனா, ஆருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் கௌரியம்மா, காலஞ்சென்ற சுப்பையா, நடராசா, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (41807) (30-11-16)

தகவல்:
இ.விக்னேஸ்வரன்,
(இலங்கை மின்சார சபை).

## பாலசிங்கம் நடனகுமார்



காரைநகர் கதிர்காமசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 281, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நடனகுமார் நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ) - சரஸ்வதி தம்பதியரின் செல்வப்புதல்வரும் செல்வநாயகி (பிரான்ஸ்), அம்பிகாதேவி (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற கமலநாயகி (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்), ஆனந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துரைராசசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஞ்சன்குமாரின் சிறிய தந்தையும் சுவாதி, பாரதி, துளசி, பவித்திரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராமச்சந்திரன், செல்வநாயகம், விசுவலிங்கம், காலஞ்சென்ற நடராசா, தேவராசா மற்றும் அருட்பிரகாசம், காலஞ்சென்ற கனகம்மா, தங்கரத்தினம் மற்றும் சிவபாக்கியம், திலகவதி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி மகேஸ்வரி வைகுந்தவாசனின் அன்பு பெறாமகனும் காண்டீபனின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'துவாரகா'*
*281, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*
(41289) (30-11-16)

## மாட்டீன் சின்னத்தம்பி

*(சாரதி, வைற் ஹவுஸ் )*

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாட்டீன் சின்னத்தம்பி நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70/20, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41303) (11-30-16)

*தகவல்:*
*யோ.றொபேட் (மெக்கானிக்).*

## கைதான 3 பொலீஸாரினதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பொலீஸார் மூவர் குறித்த விசாரணைகளும் தமிழீழப் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று காவல்துறைப் பரிசோதகர் பொன்னையா நீதிமன்றத்தில் தெரிவித்தார். ''எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்ததற்காகப் பொலீஸார் மூவரும் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல. இவர்களின் உள்நுழைவு தொடர்பான விசாரணைகளை முடிக்க காவல்துறையினருக்கு மேலதிக கால அவகாசம் தேவையாக உள்ளது. இது குறித்து மறுதரப்பிடம் விசாரணை செய்ய முடியாமல் உள்ளது.'' - என்று அவர் மன்றில் மேலும் தெரிவித்தார்.

பொலீஸார் மூவரையும் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியைத் தாம் தமிழீழ சட்டவாக்கல் செயலகத்தில் பெற்றுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

பொலீஸாரின் சார்பில் ஆஜரான சட்டவாளர் எஸ்.வேலவர், மூன்று பொலீஸாரும் கைதுசெய்யப்பட்டதற்கான குற்றத் தாக்கல் பத்திரம் தமிழீழக் காவல் துறையினரால் மன்றுக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டினார். ஒரு மாதம் கடந்த நிலையிலும் காவல்துறையினரின் விசாரணைகள் முடியவில்லையா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார். அவர்களைப் பிணையில் விடுவிக்கு மாறும் கோரினார். அத்துடன், அவர் களை நீதியாளர் அறைக்கு அழைத்துச் சென்று விசாரித்து உண்மையை அறிந்து கொள்ளுமாறும் வேண்டு கோள் முன்வைத்தார்.

வாதங்களைச் செவிமடுத்த நீதியாளர் மூன்று பொலீஸாரையும் நீதியாளர் அறைக்கு அழைத்துச் சென்று கலந்துரையாடினார். அதன் பின்னர் மூன்று பொலீஸாரினதும் விளக்க மறியல் காலத்தை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடித்த நீதியாளர் சதனா, காவல்துறையினரின் இறுதியான அறிக்கையை அன்றைய தினம் மன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (க-3)

## வவுணதீவில் திங்களிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்தக் குற்றச்சாட்டை இராணுவத் தரப்பு மறுத்துள்ளது. தமது புலனாய்வுப் பிரிவுக்கும் தாக்குதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், இது புலிகளின் வழமையான குற்றச்சாட்டு என்றும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்னாயக்க தெரிவித்தார்.

அதேசமயம், தாம் பதில் தாக்குதல் நடத்தியதில் தாக்குதலாளிகள் வவுணதீவு இராணுவ முகாம் நோக்கியே தப்பிச் சென்றனர் என்று புலிகள் தெரிவித்தனர். சுமார் 10 நிமிடங்கள் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகச் சத்தம் கேட்டது என்று அப்பகுதிப் பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் கருணா தரப்பால் நடத்தப்பட்டது என்றும், இதில் புலிகளின் மட்டு. சிறப்புத் தளபதி கேணல் பானு காயமடைந்திருக்கலாம் அல்லது உயிரிழந்திருக்கலாம் என்றும் சில ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன. இதனை விடுதலைப் புலிகள் அடியோடு மறுத்தனர்.

"வவுணதீவு இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் வைத்து எமது போராளிகள் பயணித்த வாகனம் மீது தாக்குதல் நடத்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஒட்டுப் படையினரும் முற்பட்டனர். எமது போராளிகள் திருப்பித் தாக்கியதில் அவர்கள் தப்பியோடி விட்டனர். இந்தத் தாக்குதலில் நான் காயமடைந்தேன் என்றும், உயிரிழந்து விட்டேன் என்றும் சில ஊடகங்கள் திரிபுபடுத்திச் செய்திகளை வெளியிட்டுள்ளன. இதுதான் உண்மை" - என்று கேணல் பானு தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த போராளிகளில் ஒருவரை ஹெலி மூலம் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்வதற்கு நேற்று அவசர முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் போராளியை கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கே முடியும் என்று அரச சமாதானச் செயலகத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் விமானப்படை ஹெலி ஒன்று நேற்றுப் பிற்பகல் கரடியனாறில் தரையிறங்கியது. எனினும் காயமடைந்த போராளியை அங்கு எடுத்து வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேலாகும் என்று தெரிவிக்கப்பட்டதால் ஹெலி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

இதனையடுத்து பிற்பகல் 3.30 மணியளவில் ஏற்றிச் செல்வதற்குத் தயாரான நிலையில் போராளி இருந்தபோதும், சீரற்ற காலநிலையைக் காரணம் காட்டி ஹெலி கரடியனாறுப் பகுதிக்கு வரவில்லை. "3.30 மணிக்கு மேலாகியும் கூறியபடி அவர்கள் வரவில்லை. தொடர்ந்து மழை பெய்வதால் அவர்கள் வருவார்களா என்பதும் தெரியவில்லை'' - என்று கேணல் பானு நேற்று மாலை தெரிவித்தார். (க-3)

## நாடாளுமன்றை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய யோசனையை ஐ.தே.க. தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லையெனத் தெரிவிக் கப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றக் கலைப்பு இடம்பெற்றால் ஏற் படும் பல்வேறு தாக்கங்கள் குறித்தும் ஐ.தே.க. தலைவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள் ளார்.

ஐ.தே.க. தலைவருடனான இந்தத் தொலைபேசி உரையாடலையடுத்து, நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான யோசனையை ஜனாதிபதி ஒத்திவைத்துவிட்டாரெனவும் கூறப்படுகிறது. (க-3)

## யுனிசெவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் நியமிக்கப்படும் மதியுரைஞர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து மீள் பரிசீலனை செய்வதற்கும் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், ஏனைய சிறுவர் நலன் விரும்பிகள் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்படுவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராசா, சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் உடனிருந்தனர். (க-3)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் மங்கள மேலும் தெரிவித்ததாவது-

ஜே.வி.பியுடன் சேர்ந்து ஏற்கனவே நாம் ஒரு கொள்கை அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம். நாட்டை முன்நோக்கி நகர்த்துவது என்ற கொள்கை அடிப்படையிலேயே இந்தச் செயற்பாடு இருக்கின்றது.

இன்று நாடு ஒரு பொருளாதாரக் கொள்கையில் நிர்வகிக்கப்படுகிறது. அது தொடரும். அதில் மாற்றம் இருக்காது. அது அரசின் பொருளாதாரக் கொள்கை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை நாம் ஞாயிறன்று வெளியிடவுள்ளோம். அதில் அடங்க வேண்டிய பொருளாதாரக் கொள்கையும் அதன் உள்ளடக்கமும், பெரும்பாலும் இறுதியாகியேவிட்டன எனத் தெரிவித்தார் அமைச்சர் மங்கள சமரவீர. (க-3)


### வேலை வாய்ப்பு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட விசேட சைக்கிள் மூலம் பாண் விநியோகம் செய்யக் கூடியவர்கள் உடன் வரவும்.

வெதுப்பகத் தொழில் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.

*சுவிஸ் வெதுப்பகம், நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை.* T.P.0212263325

(41221)

விக்னா கல்வி நிறுவனம்

அளவையியல்

திரு. சயந்தன்

மீட்டல்

வினா விடை

ஆரம்பம்:–

12.10.2005

4 மணி

புதன்,வெள்ளி.

(41231)


## அதிகாரப் பகிர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார். அவரது இந்தக் கூற்று, ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் பிரதமர் செய்துகொண்ட உடன்படிக்கைகளில் கூறப் பட்டுள்ள விடயங்களுக்கு முரண்பட்டிருந் தது. நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒற்றை யாட்சிக்குள்ளேயே இறுதித் தீர்வு காணப்பட வேண்டும் என்று அந்த உடன்பாடுகளில் கூறப்பட்டுள்ளது.

பிரதமருக்கு ஆதரவு தேடும் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் நேற்றே முதற்றடவையாக ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றினார். அவரது வருகையையொட்டி அப்பகுதி எங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் வாரியப்பொல விஜயத்துக்கு ஒரு நாள் முன்னதாகவே சிலாபம் மாரவில பகுதியில் இருந்து சினைப்பர் துப்பாக்கி ஒன்றும் வேறு சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. அதனையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்பட்டன.

விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலீஸார் முழு ஆயுதபாணிகளாக வாரியப்பொல வீதிகள் எங்கும் குவிக்கப்பட்டிருந்தனர்.

பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் பேசுகையில் -

''அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று நாட்டிலுள்ள 78 சதவீதமானோர் விரும்புகின்றனர். சுதந்திரக் கட்சியின் கொள்கையும் அதுவே. அதனை மாற்ற ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். நான் அதிகாரத்தைப் பொறுப்பேற்ற பின்னர் வந்த அனைத்துத் தேர்தல்களிலும் மக்கள் அதற்காகவே வாக்களித்துள்ளார்கள்'' - என்றார்.

பிரதமர் மஹிந்தவுக்கு எப்போதுமே தனது ஆதரவு இருக்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி, தனது அரசு கடந்த காலங்களில் செய்த அபிவிருத்தி வேலைகளையும் பட்டியலிட்டார். மஹிந்த ராஜபக்ஷவும் இந்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுட்டுக்கொல்லப்பட்டவர் செந்தில் என அழைக்கப்படும் சிவலிங்கம் வில்வராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த சனியன்று தனது வீட்டிலிருந்து விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்ட இவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கொலையை தமிழீழ விடுதலைப் புலிகளே செய்துள்ளார்கள் என ஈ.பி.டி.பியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.(க-3)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறியலில் வைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று வரை 34 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பதுடன், இது தொடர்பாக 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## யாழ்ப்பாணத்தில் சீரழிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்களை ஊக்குவித்துவருகின்றனர்.

அவசர காலச்சட்டத்தைப் படையினரும் பொலீஸாரும் துணைக்குழுக்களும் கையில் எடுத்து அத்துமீறல்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

குழு மோதல்களில் ஈடுபடுவோருக்கு பொலீஸாரும் படையினரும் கைக்குண்டுகளை வழங்கியிருப்பதும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் ஆதாரங்களுடன் தகவல் தந்துள்ளனர்.

களவுகள் மற்றும் தெருச் சண்டைகளில் ஈடுபடுவோர் பின்னர் பாதுகாப்பாக காவலரண்களுக்குள்ளும் படை முகாம்களுக்குள்ளும் சென்று தப்பிவிடுகின்றனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் முறைப்பாடுகள் செய்தாலும் பொலீஸார் நடவடிக்கை எடுப்பதில்லை. லஞ்சம் பெற்றுக்கொண்டு பொலீஸார் அநீதிக்கு துணைபோகின்றனர்.

களவுகள், கொள்ளைகள் பரவலாக இடம்பெறுகின்றன. குறிப்பாக யாழ். நகரம், நல்லூர் இருபாலை, கோண்டாவில், உடுவில், கரவெட்டி போன்ற பகுதிகளில் கொள்ளைகள் சகஜமாக நடக்கின்றன. பொலீஸாரும் படையினரும் அத்துமீறல்களுக்குத் துணை போவதால் பொதுமக்கள் பொலீஸில் முறைப்பாடு செய்ய அஞ்சுகின்றனர்.

அண்மைய நாள்களில் இடம்பெற்ற படுகொலைகளில் படைத்தரப்பு நேரடியாகச் சம்பந்தப்பட்டிப்பது அம்பலமாகியுள்ளது. உடுவில் அமைந்துள்ள இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் மகேஸ் பண்டா என்பவரே உடுவிலில் வீடியோ கடை உரிமையாளரைக் கொலை செய்தார் என்பதற்கான ஆதாரங்கள் பொதுமக்களால் எமக்குத் தரப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டியில் இளம்தாய் ஒருவர் மீது இராணுவச் சிப்பாய் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வர்த்தகர்களின் சுதந்திரமான செயற்பாடுகள் அச்சம் காரணமாகக் குறைந்துவருகின்றன.

மக்கள் தமது இயல்பான எதிர்ப்பை – கண்டனத்தை – வெளிப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இராணுவ அச்சுறுத்தலே அதற்குக் காரணம்.

யாழ். மாவட்டத்தில் அரசியல் பணி செய்ய முடியாத நிலையில் விடுதலைப் புலிப் போராளிகள் வெளியேறிய பின்னர், மக்களின் இயல்பு வாழ்க்கை சிதைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பீதியுடனும் அச்சத்துடனும் வாழும் நிலையில், பொலீஸாரும் இராணுவத்தினரும் சமூகச் சீர்கேடுகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் துணைபோகின்றனர்.

கொலைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இவர்கள் துணைபோகும் நிலையில், போர்நிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளாகிவிட்டது.

எமது போராளிகள் அங்கிருந்து வெளியேறிய பின்னர் யாழ்ப்பாண நிலைமை பாரதூரமானதாக மாறியுள்ளது எனக் கருதுகின்றேன்.

சிங்கள, பௌத்த பேரினவாதம் யாழ்ப்பாணத்தில் நலிவுற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க முனைந்து நிற்கின்றது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேண வேண்டியவர்கள் சீர்குலைவுக்கு துணைபோகின்றார்கள். எனவே இவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து மக்கள் மத்தியில் உருவாகியுள்ள நம்பிக்கையீனத்தை அகற்றி சகஜ நிலையை ஏற்படுத்திப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் துரிதமாகச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் – இப்படி இளம்பரிதி தெரிவித்தார். இவ்விடயங்களை தமது தலைமைக்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உறுதி கூறினர். (ஐ-3)


### மரண அறிவித்தல்

*நடராஜா சிவகடாச்சம்*

மானிப்பாய் வீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சிவகடாச்சம் அவர்கள் நேற்று (11.10.2005) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய்.** 
தகவல்: **மனைவி.**

(சி-45580)(30-11-13)

EXPOAIR
*your friend in the skies...*

எக்ஸ்போ எயார்
*வானத்தில் உங்கள் நண்பன்...*





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.